பக்கங்கள்: 18

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 13 ஞாயிற்றுக்கிழமை 30.10.2022 கதிர் 357

### இது ரகசியம் அல்ல!

பளைப் பகுதியில் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் காணியில் ஆளும் கட்சி அரசியல் செல்வாக்கில் 22 பேருக்கும் வழங்கிய 110 ஏக்கர் காணிகளுக்குள் எவரும் உட்பிரவேசிக்கக் கூடாது என ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. ☞2

# மீண்டும் போராட்டம் வெடித்து மக்களின் அரசு உருவெடுக்கும்

## அதைத் தடுக்க முடியாது என சஜித் சூளுரை



கதிர்காமம்,ஒக்ரோபர் 30

மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஆட்சியை அமைப்பதற்கு இன்னுமொரு மக்கள் போராட்டம் அவசியமாகும். விரைவில் அவ்வாறானதொரு ஜனநாயக ரீதியான மக்கள் போராட்டமொன்று முன்னெடுக்கப்படும். அந்த போராட்டத்தினை எவராலும் துப்பாக்கிகளாலும், தடியடிகளாலும், பயங்கரவாதத் தடைச்சட்டங்களினாலும் , வேறு வன்முறைகளாலும் நிறுத்தி விட முடியாது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்தார். ☞2

## இரட்டைக் குடியுரிமை சர்ச்சை; துருவுகின்றது புலனாய்வு பிரிவு!

இரட்டைக் குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் அரச புலனாய்வுப் பிரிவினரால் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் புலனாய்வு பிரிவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ☞2

## வடக்கு அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆளுநர் ஏற்பாட்டில் வட்டமேசை மாநாடு

வடமாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பங்கெடுப்புகள் தொடர்பில் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஹிடோக்கி மிசுகோஷி இணைந்து கொழும்பில் வெள்ளிக்கிழமை வட்டமேசை கலந்துரையாடலை ஏற்பாடு ☞2

## பாலுறவு ஊக்க மருந்தின் பாவனையால் மரணங்கள்

### அதிகரிப்பு என எச்சரிக்கை

பாலுறவு ஊக்க மருந்து பாவனையினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரிப்பது அவதானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மரண பரிசோதகர் இரோ தோனி சமரவீர தெரிவித்துள்ளார். ☞2

## இலங்கையின் போக்குக் குறித்து ஐரோப்பிய ஒன்றியக் குழு கவலை



பயங்கரவாத தடைச் சட்டம் அமுலில் உள்ளமை மற்றும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகள் அமுலாக்கப்படாமை என்பன குறித்து ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்ட குழுவினர் கவலை வெளியிட்டுள்ளனர். ☞2

## இலங்கையிலிருந்து கடல் வழியே கடத்தப்பட்ட 75 கோடி ரூபா தங்கம் தமிழ்நாட்டில் மாட்டியது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.29

இலங்கையிலிருந்து தமிழக கடற்கரை வழியாக கடத்தி செல்லப்பட்டதாகக் கூறப்படும் 35.6 கிலோ தங்கத்தை (இலங்கைப் பணத்தில் பெறுமதி சுமார் 75 கோடி ரூபா) சென்னை வருவாய் புலனாய்வு இயக்குநரகம் பறிமுதல் செய்துள்ளது.

சென்னை வருவாய் புலனாய்வு இயக்குனரகம் (டி.ஆர்.ஐ.) சமீபத்தில் நடத்திய மிகப்பெரிய கடத்தல் தடுப்பு நடவடிக்கையாக, 27.10.2022 இரவு தமிழகத்தின் கடலோரப்பகுதிவழியாககடத்தப்பட்டதாகக் கூறப்படும் - இந்தியப் பணத்தில் ரூ.18.34 கோடி மதிப்புள்ள - 35.6 கிலோ வெளிநாட்டு தங்கத்தை பறிமுதல் செய்தது. ☞2

## டிசெம்பர் 8 இல் அரசு கவிழுமாம்

### சன்ன ஜயசுமன ஆருடம்



எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமாயின் அரசாங்கம் கவிழும் அபாயம் காணப்படுவதாக அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற ☞17

## தினசரி 5 லட்சம் லீற்றர் மண்ணெண்ணை மீன்பிடி துறைமுகங்களுக்கு தரப்படுமாம்!

கொழும்பு, ஒக். 30

மீன்பிடி துறைமுகங்களுக்கு நாளாந்தம் 500,000 லீற்றர் மண்ணெண்ணையை வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

மீனவர்களின் எரிபொருள் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலின் போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அதன் செயலாளர் இந்து கருணாரத்ன தெரிவித்துள்ளார். ☞17

## ஒன்றரை லட்சம் கோடி ரூபாவுக்கு புது நோட்டுகள் எட்டு மாதங்களில்



கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் இலங்கை மத்திய வங்கி 3 ஆயிரத்து 160 கோடி ரூபாயை அச்சிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் முதல் 8 மாதங்களில் மொத்தமாக ஒரு லட்சத்து 47 ஆயிரத்து 330 கோடி ரூபா பணம் அச்சிடப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.



## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காணி சம்பந்தப்பட்ட பிரச்சினையை சில வாரங்களுக்கு முன்னர் நாம்அம்பலத்துக்குக் கொண்டுவந்ததை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

பளைப் பகுதியில் உள்ள - காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான - நிலத்தை நிலம் அற்ற ஏழை மக்களிற்கு அல்லது காணாமற்போனோரின் உறவுகளிற்கு அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்குமாறு நீண்டகாலமாகக் கோரிக்கை விடப்பட்டு வந்தன.

இருப்பினும் ஆளும் கட்சிகளின் அடிவருடிகள் என்ற அடிப்படையில் 2021ஆம் ஆண்டு 22 பேருக்கு தலா 5 ஏக்கர் வீதம் இந்தக் காணி வழங்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளி வந்தது. இந்த விடயம் அமைச்சரவையில் சுட்டிக் காட்டப்பட்டபோது, அப்படி காணி வழங்கப்பட்டமையை உரிய அமைச்சும் ஏற்றுக் கொண்டது.

இதனையடுத்து இதன்போது நிலம் வழங்கப்பட்டவர்கள் தொடர்பிலும், வழங்கியமை தொடர்பிலும் ஆராய்ந்து அவர்களின் தகுதி மற்றும் தேவை தொடர்பில் தனியான அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், வழங்கப்பட்ட அந்த 110 ஏக்கர் காணிக்குள்ளும் எவருமே பிரவேசிக்க கூடாது என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிகள் தென்னிலங்கை அரசியல் கட்சியின் ஆதரவாளர்களிற்கும் பணம் படைத்தோருக்கும் என 22 பேருக்கு தொழில் நுட்பக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஊடாக தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிபார்சில் தலா 5 ஏக்கர் நிலம் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரச நிலங்கள் உணவு உற்பத்திக்கு என்னும் பெயரிலேயே இப்படித் தானமாக வழங்கப்பட்டன. ஆனாலும் காணிகள் வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் அங்கு ஒரு புல், பூண்டு கூட சம்பந்தப்பட்ட தரப்பால் முளைக்க வைக்கப்படவில்லை என்பதுதான இவ்விவகாரத்தில் விசனம் தரும் உண்மையாகும்.

- மின்னல் -

## மீண்டும் போராட்டம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதிர்காமம் பிரதேசத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாட்டைப் பாதுகாப்பதற்காக பஸில் ராஜபக்ஷ மீண்டும் வருவார் என பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் குறிப்பிடுகின்றார்.

2015 இல் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷவைக் கைவிட்டுச் சென்றவரே தற்போது நாட்டை பாதுகாப்பதற்கு வருகிறார் எனக் குறிப்பிடுகின்றனர்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்யும் சதித்திட்டத்தில் பிரதான சூத்திரிதாரி ஏழு மூளைகள் கொண்ட காகமாகும். சுபீட்சத்தின் நோக்கு எனக் கூறிக் கொண்டு வந்தவர்கள், சிறிதளவேனும் சுபீட்சத்தை ஏற்படுத்தவில்லை. செழிப்பாகக் காணப்பட்ட நாட்டை, பிச்சையெடுக்கும் நாடாக மாற்றியுள்ளனர். வறுமையான நாடாகவே உலகம் இன்று இலங்கையை பார்க்கின்றது. யாரை மீண்டும் அழைத்து வந்தாலும், மக்கள் அவர்களுக்கு சிறந்த பதிலை வழங்கவே காத்திருக்கின்றனர்.

தற்போது மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளனர் எனக் கூறுகின்றனர். இவ்வாறான தீர்மானங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தால் மக்கள் எவ்வாறு இந்நாட்டில் வாழப்போகின்றனர்? குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து கொண்டு, தமது தேவைக்கேற்ப மின் கட்டணத்தை அதிகரிக்கும் யுகத்திற்கு நாம் முற்றுப்புள்ளி வைப்போம். மாறாக மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு முயற்சித்தால் 220 இலட்சம் மக்களுடன் வீதிக்கு இறங்கிப் போராடுவோம்.

மக்களுக்கான அரசாங்கத்திற்காக நாம் போராடுவோம். நாட்டில் பணம் இல்லை என்பதால் , மக்களுக்கான சலுகைகள் எவையுமே இல்லை என்ற கோஷத்தை நாம் நீக்குவோம்.

அரச அதிகாரம் இல்லை என்றாலும், மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கும் கட்சி ஐக்கிய மக்கள் சக்தி என்பதை அனைவரும் அறிவார்கள்.

நாட்டில் பாரிய மாற்றமொன்று அவசியமாகும். இந்த மாற்றங்களை தலைகளை மாற்றுவதால் ஏற்படுத்த முடியாது. பாரிய போராட்டங்களை முன்னெடுத்து நாட்டை மோசமான நிலைமைக்கு கொண்டு சென்ற ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரை மக்கள் பதவிகளிலிருந்து விலகச் செய்தனர்.

ஆனால் அதன் பிரதி பலனாக பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த 134 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து, தம்மைப் பாதுகாப்பதற்காக காவலர் ஒருவரை ஜனாதிபதியாக நியமித்துள்ளனர். ஆர்ப்பாட்டங்களினால் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்பட்டனவா? இல்லை. மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற ஆட்சியை அமைப்பதற்கு இன்னுமொரு மக்கள் போராட்டம் அவசியமாகும். விரைவில் அவ்வாறானதொரு ஜனநாயக ரீதியான மக்கள் போராட்டமொன்று முன்னெடுக்கப்படும்.

அந்த போராட்டத்தினை எவராலும் துப்பாக்கிகளாலும், தடியடிகளாலும், பயங்கரவாதத் தடைச்சட்டங்களினாலும், வேறு வன்முறைகளாலும் நிறுத்தி விட முடியாது. மக்களின் அரசாங்கத்தின் தோற்றத்துடனேயே இம்முறை ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வரும். - என்றார்.

## இரட்டைக் குடியுரிமை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விசாரணைக்குப் பின்னர், அரசாங்கத்திடம் முதற்கட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் இரட்டைக் குடியுரிமையுடன் சுமார் பத்து எம்.பி.க்கள் இருப்பதை உறுதி செய்வதற்காக இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## பாலுறவு ஊக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு பல முக்கிய காரணங்கள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"பாலுறவு ஊக்க மருந்துகளின் பயன்பாட்டினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நாம் பார்க்கிறோம். தரமற்ற மருந்துகளின் பயன்பாடு, தவறான அளவு மற்றும் மருத்துவ ஆலோசனையின்றி மருந்துகளைப் பயன்படுத்துவதே இந்த இறப்புகளுக்கு முக்கியக் காரணமாகும்.

20 - 25 வயதிற்குட்பட்டவர்களும் மற்றும் 40-45 வயதிற்குட்பட்டவர்களும் இவ்வாறு பாதிக்கப்படுகின்றனர். பல இளைஞர்கள் இந்த பாலுறவு ஊக்க மருந்தினை பரிசோதனைக்காகப் பயன்படுத்துகின்றனர். மாதத்திற்கு இரண்டு அல்லது மூன்று சம்பவங்கள் பதிவாகின்றன. இது உண்மையில் அதிக எண்ணிக்கை. எனவே நாங்கள் இது குறித்து விசேடமாக கவனம் செலுத்த வேண்டும்.

## வடக்கு அபிவிருத்தி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருந்தனர்.

இந்த வட்டமேசைக் கலந்துரையாடலில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஹிடேக்கி மிசுகோஷி, மாற்றுக் கொள்கைக்கான மையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, இந்தியாவில் உள்ள இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட,வடக்கு ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் தன்யா ரத்னாவல், கொரிய தூதுவர் சந்துஷ் ஜியோங் வூன்ஜின், தாய்லாந்து தூதுவர் ஹெச், வியட்நாம் தூதுவர் போஜ் ஹான்போல், திருமதி ஹோ தித்தான் ட்ரூக் (தூதர்) மலேசியா, இந்தோனேசியா தூதர் எச்.இ. டெவி குஸ்டினா டோபிங் ,யாழ் இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நடராஜ், இலங்கைக்கான துருக்கி தூதரக அதிகாரி பிலால் சக்லாம் (மூன்றாவது செயலாளர்), சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தூதரக அதிகாரிகள் மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கு விளக்கமளித்தார்.

கலந்துரையாடலில் பங்கு கொண்ட தூதரக அதிகாரிகள் மற்றும் அரசு சார் பற்ற நிறுவனத்தின் பணிப்பாளர்கள் வட மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி திட்டங்களுக்கு காத்திரமான பங்கை வகிப்பதுடன் விரைவில் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

## இலங்கையின் போக்குக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டக்குழுவினர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின் போது, ஆணைக்குழுவிற்கு பூரண ஆதரவை வழங்க தயாராகவுள்ளனர் என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விஜயத்தின் போது, இலங்கை தற்சமயம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தமது கரிசனையை வெளியிட்டுள்ளனர்

இதுதவிர, பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் உள்ளமை, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைதியான போராட்டம் குறித்த விசாரணைகள் தொடர்பில், அவதானம் செலுத்தப்பட்டதுடன், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகள் அமுலாக்கப்படாமை குறித்தும் தமது கவலையை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

## இலங்கையிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டி.ஆர்.ஐக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில், மதுரை - ராமநாதபுரம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சுங்கச் சாவடியில் காரில் பயணித்த 3 பேரை மடக்கிப் பிடித்து காரைச் சோதனையிட்ட அதிகாரிகள், அவர்கள் காரில் மறைத்து கடத்தி கொண்டு சென்ற தங்கத்தை பறிமுதல் செய்தனர்.

முதற்கட்ட விசாரணையில் இலங்கையில் இருந்து தமிழக கடற்கரை வழியாக இந்தியாவிற்கு தங்கம் கடத்தி வரப்பட்டது தெரியவந்தது. இதுவரை 3 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் விசாரணை நடந்து வருகிறது.

டி.ஆர்.ஐ. என்பது இந்திய அரசின் முதன்மையான கடத்தல் தடுப்பு அமைப்பாகும். டி.ஆர்.ஐ. சென்னை, கடத்தலைத் தடுப்பதில் எப்போதும் விழிப்புடன் செயல்பட்டு வருகின்றது. டி.ஆர்.ஐ. சென்னை மேற்கொண்ட தீவிர கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளால் ஏப்ரல் 2022 முதல் தமிழக கடற்கரை வழியாக 105 கிலோவுக்கு மேல் கடத்தப்பட்ட தங்கத்தை பறிமுதல் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



# இன்னும் சில நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

0768226244
0768226240

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்த கேள்விக்கு என்ன காரணம்?

**'நித்திரை செய்பவனை எழுப்பலாம். நித்திரை செய்பவன் போல நடிப்பவனை எழுப்ப முடியாது.'**

**நாட்டின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பில், அப் படி ஒரு பிரச்சினையே இல்லை என்பது போல தென் இலங்கை அரசியல் தலைமைகள் சில நடிக்கின்றன. பாசாங்கு பண்ணுகின்றன. அப்படி ஒரு பிரச்சினை நாட்டில் இருப்பது தங்களுக்குத் தெரியவே தெரியாது என்று தூங்குபவன் போல அவர்கள் நடிப்பதும் பல சமயங்களில் ஆச்சரியத்தை தருவதுண்டு.**

**அப்படித்தான் இப்போது நடிக்க முற்பட்டிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தன.**

**'விடிய விடிய ராமாயணம், விடிந்த பிறகு ராமனுக்கு சீதை என்ன முறை என்று கேட்டாளாம்' என்ற கதை மாதிரி இருக்கின்றது இப்போது அவர் எழுப்பி இருக்கின்ற கேள்வி.**

**தமிழருக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை உண்டு என ஒன்றும் தெரியாதவர் போல கேள்வி எழுப்பி இருக்கின்றார் ரோஹித அபேகுணவர்தன.**

**இந்த நாட்டை உலுக்கிய இனப் போர் ஏன் இங்கு வெடித்து? இந்த நாடு – இலங்கை தீவு – ஏன் இரத்த ஆற்றில் குளித்தது என்பதைப் புரியாதவர் போல அவர் பேசி இருக்கின்றார்.**

**அவரது இந்த நடிப்பு கேள்வி எழுப்பப்பட்டிருக்கும் சமயம் – கால நேரம் – அதற்குள் பொதிந்து கிடக்கும் அர்த்தத்தை நிரூபித்து நிற்பதும் கவனிக்கத் தக்கது.**

**நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு அடுத்த ஓராண்டுக்குள் தீர்வு காண முயற்சிப்பேன் என்று புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோடி காட்டிய சமயத்தில், அப்படி ஏதும் பிரச்சினைகள் தமிழருக்கு இங்கு உள்ளனவா என்ற மாதிரி கேள்வி எழுப்பியிருக்கின்றார் ரோஹித அபேகுணவர்தன.**

**அதுவும் தமது அரசியல் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவை அருகில் வைத்துக் கொண்டு இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கிறார் அவர்.**

**ஏழரை தசாப்த காலமாக இந்த நாட்டில் புரையோடிப் போய் கிடக்கும் தேசிய இனப்பிரச்சினை குறித்து தெரியவே தெரியாது என்று அடம்பிடிக்கும் சிங்களத் தலைவர்களை ஆட்சி அதிகாரத்தில் வைத்துக் கொண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது மணலை கயிறாகத் திரிக்கும் வேலைதான்.**

**தலைவர் பிரபாகரனும் அவரது படையும் களத்தில் இருந்திருந்தால் நாட்டின் தேசிய பிரச்சினை தொடர்பான தமிழர்களின் குரல், ஏனைய இலங்கைத் தலைவர்களுக்கு மத்தியில் மட்டுமல்லாமல், சர்வதேசத்தின் மத்தியிலும் ஓங்கிக் கேட்டிருக்கும்.**

**ஆனால் அவரும் அவரது படையும் இல்லாமல் போனமையால், தமிழருக்கு என்ன பிரச்சினை என்று ஒன்றுமே புரியாத தரப்புகள் மாதிரி தென்னிலங்கை தலைவர்கள் கூற, அதைக் கேட்டு அடங்கியிருக்கின்ற நிலைமை தமிழருக்கு....!**

## மாகாண சபைத் தேர்தல்களை விரைவுபடுத்த ஒன்றிணையுமாறு டக்ளஸ் பகிரங்க அழைப்பு!



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை விரைவுபடுத்தும் நோக்கில் தமிழ் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்மூலம் மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவுபடுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் அனைத்து தரப்புக்களையும் ஒன்றிணைத்து செயற்படுத்துவதற்கான ஆர்வத்தை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த அரசியல் சூழலைத் தமிழ்த் தரப்புக் கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குறுகிய நலன்களையும், தேர்தல் அரசியல் பற்றிய சிந்தனைக ளையும் ஒதுக்கிவைத்து விட்டு, அனைத் துத் தமிழ் தரப்புக்களினதும் முயற்சிகள் மற்றும் தியாகங்களின் பலனாகக் கிடைத்த மாகாண சபைகளை செயற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஒன்றிணைந்து செயற்பட அனைவரும் முன்வரவேண்டும்.

அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாண சபைகளை செயற்படுத்துவதன் மூலம் அதனைப் பாதுகாத்துக் கொண்டு, ஒவ்வொரு தரப்பினரும் தாங்கள் எதிர் பார்க்கின்ற அபிலாஷைகளை வென்றெடுப்பது பற்றி சிந்திப்பதே ஆரோக்கியமான அணுகுமுறையாக இருக்கும்.

கடந்த காலங்களில் கிடைத்த சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டமையைப் போன்று, தற்போதைய அரசியல் சூழலையும் தவறவிடாமல் பயன்படுத்திக்கொள்ள அனைவரும் முன்வரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## பருத்தித்துறையில் வீடுபுகுந்து 33 பவுண் நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் வீடொன்றினுள் கடந்த வியாழக்கிழமை புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த 33 பவுண் நகை களைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் வேலை நிமிர்த்தம் வீட்டில் இருந்து வெளியே சென்ற சமயம், வீட்டினுள் புகுந்த திருடர்கள் வீட் டில் இருந்த 33 பவுண் தங்க நகைகளைத் திருடி சென்றுள்ளனர். வீட்டார் மாலை வீடு திரும்பிய போதே வீட்டினுள் திருடர்கள் புகுந்து நகைகளைத்திருடிச்சென்றமை தெரிய வந்துள்ளது.

அதனை அடுத்து சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## நடத்துநர் இன்றி இயங்குகின்ற பஸ் சேவை ஆரம்பிக்க திட்டம்!



நடத்துநர் இன்றி இயங்கும் அதிநவீன பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கான திட்டம் தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவிற்கும் தனியார் தொழில்நுட்பக் குழுவிற்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கையடக்கத் தொலைபேசி செயலி மூலம் நடைமுறைப் படுத்தப்படும் பொதுப் போக்குவரத்துச் சேவை பற்றி அறிமுகம் செய்யப்பட்டது. கொழும்பு கோட்டை, கொம்பனிதெரு, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பொரளை, நகர மண்டபம் உட்பட கொழும்பு நகரின் பெரும்பாலான பிரதான நிலையங்களை உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வளவு தூரம் பஸ்ஸில் பயணித்தாலும் 200 ரூபா மட்டுமே நிர் ணயிக்கப்பட்ட கட்டணம் என்பது இந்தத் திட்டத்தின் சிறப்பாகும்.தொலைபேசி செயலி மூலம் கட்டணம் செலுத்தப்படும் என்பதால், இந்த பஸ்களில் நடத்துநர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிய கிளியர் சங்கத்தின் ஊடாக இலங்கையுடன் வர்த்தகம் செய்வதைத் தவிர்க்குமாறு பங்களாதேஷ் வங்கி அறிவுறுத்து!

பங்களாதேஷின் மத்திய வங்கியான பங்களாதேஷ் வங்கி, ஆசிய கிளியர் சங்கத்தின் ஊடாக இலங்கையுடன் வர்த்தகம் செய்வதைத் தவிர்க்குமாறு அந்த நாட்டு வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் என வெளிநாட்டு ஊ டகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2022 ஒக்ரோபர் 14 ஆம் திகதி முதல் ஆசிய கிளியரிங் யூனியன் பொறிமுறையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்தது.

இதனையடுத்து அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்களும் வர்த்தகம் மற்றும் எந்தவொரு வியாபாரத்தையும் அந்த பொறிமுறையின் ஊடாக மேற்கொள்ள வேண்டாம் என்று பங்களாதேஷ் வங்கியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிய கிளியரிங் யூனியன் மூலம் பங்கேற்கும் நாடுகள் உள்பிராந்திய பரிவர்த்தனைகளுக்கான இறக்குமதி கட்டணங்களைத் தீர்த்துக்கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்துவரும் உண்மையான போராட்டம் பெற்றோரால் வீட்டிலிருந்து ஆரம்பிக்கும்!

உண்மையான போராட்டம் இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித் துள்ளார்.

முன்னைய போராட்ட அமைப்பு ராஜபக்ஷக்களை வீட்டுக்குத் துரத்துவதை நோக்கமாகக் கொண்டது என்றும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கிளர்ச்சி பெற்றோரால் வீட்டிலிருந்து ஆரம் பிக்கும் என்றும் குழந்தைகளின் பசி தாங்க முடியாத தால், அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவளிக்க முடியாமல் தெருவில் இறங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பெற்றோர்கள் ஒன்றுகூடுவார்கள் என்றும் அந்த பெற்றோரின் எரியும் பிரச்சினைகளுடன் இந்தத் தலைவர்கள் விளையாட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதிக்குள் புதிய ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கும் என்றும் எனவே டிசெம்பர் இறுதிக்குள் இவை அனைத் தும் முடிவுக்கு வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலுக்கு அழைப்பதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறு வழியில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.


ஹிருணிகா எச்சரிக்கை









பேராதனை தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழவையின் ஏற்பாட்டில் கல்லூரியின் பீடாதி பதி தலையில் என். நிலவிந்தனின் “பனை யோலைக் குடிசைக்குள் ஒரு விளக்கு வெளிச் சம்” நூல் அறிமுகவிழா கடந்த 26.10.2022 ஆம் திகதி இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உபபீடாதிபதிகள், விரிவு ரையாளர்கள் ஆசிரியப் பயிலுநர்கள் என பல ரும் கலந்து கொண்டனர்.

என். நிலவிந்தனின் முதலாவது கவிதை நூல் இது என்பதோடு, ஏற்கனவே கம்பளை இந்துக் கல்லூரியில் வெளியீட்டு விழா நடை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்கு மருந்து கலவையாளரை நியமிக்குக!

## நோயாளர்கள் ஊடகங்கள் ஊடாகக் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் சுமார் ஒரு மாத காலமாக மருந்து கலவையாளர் இல்லாமையால் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த பல நூற்றுக் கணக்கான மக்கள் நாளாந்தம் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகின்றனர்.

முத்துஐயன்கட்டு உள்ளிட்ட தூர இடங்களில் இருந்தும் ஓட்டோக்களுக்கு அதிக பணம் செலுத்தி மக்கள் வைத்தியசாலைக்கு வந்தும் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியாது பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இன்றும் வைத்தியசாலைக்கு வருகைதந்த பல நோயாளர்கள் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் இதனால் தாம் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுக்கின்றனர் எனவும் எனவே தமக்கான தீர்வை உடனடியாகப் பெற்றுத்தருமாறு ஊடகங்கள் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மு.உமாசங்கரைத் தொடர்பு கொண்டு வினவிய போது –

முல்லைத்தீவு மாவட்டத்தில் 33 மருந்துக் கலவையாளர்கள் இருக்கவேண்டிய நிலையில் 21 பேர் மாத்திரமே இருக்கின்றனர் எனவும், அதிலும் நான்கு பேர் விடுமுறையில் உள்ளமையால் 17 பேர் மாத்திரமே கடமையில் உள்ளனர் எனவும், மூன்று வைத்தியசாலைகள் நிரந்தமாகவே மருந்து கலவையாளர் இல்லாமலேயே சேவை வழங்குவதாகவும், ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் சேவையில் இருந்த மருந்துக் கலவையாளர் நீண்ட காலம் விடுமுறையில் உள்ளார் எனவும், மாற்றீடு செய்யக்கூடிய அளவில் மருந்து கலவையாளர்கள் இல்லாமையால் மாவட்ட வைத்தியசாலை மாவட்ட மருந்து வழங்கல் பிரிவு மற்றும் மூன்று ஆதார வைத்தியசாலை உள்ளடங்களாக மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளை இயக்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் இதனாலேயே இவ்வாறான நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.













# தமிழில் உள்ள ஓரெழுத்துச் சொற்கள்


தமிழில் ஓர் எழுத்தில் அமையும் சொற்கள் எத்தனை உள்ளன என்று தெரியுமா? நம்மில் பலர் அத்தகைய சில சொற்களை அறிந்திருப்போம். உங்களுக்குத் தெரிந்த ஓரெழுத்துச் சொற்களை எண்ணிப் பாருங்கள்! இந்தப் பகுதியைப் படித்த பின், நாம் அறியாத சொற்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளது என்பதும், அவை என்னென்ன என்பதும் நமக்குத் தெரிய வரும்!

ஓர் எழுத்து மட்டுமே சொல்லாக அமைந்து பொருள் தந்தால், அதற்கு ஓரெழுத்து ஒரு மொழி என்று பெயர். தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான நன்னூலில், மொத்தம் 42 ஓரெழுத்துச் சொற்கள் தமிழில் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நாற்பத்தியிரண்டு சொற்களில், நொ மற்றும் து ஆகிய இரண்டு சொற்களைத் தவிர, மற்ற நாற்பது சொற்களும் நெடிலாக அமைந்துள்ளன.

ஓர் எழுத்து மட்டுமே பொருள் தரும் சொற்கள் இந்த அளவுக்கு அதிக எண்ணிக்கையில் அமைந்திருப்பது நம் செந்தமிழின் சிறப்புகளில் ஒன்று.

கீழ்க்கண்ட பட்டியலில் நாற்பத்தியிரண்டு ஓரெழுத்துச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

ஆ (பசு)
ஈ (கொடு, படை, ஈனு, பூச்சி - பறக்கும்
ஈ, தேனீ)
ஊ (இறைச்சி)
ஏ (அம்பு)
ஐ (தலைவன்)
ஓ (மதகுநீர் தாங்கும் பலகை)
கா (சோலை)
கூ (பூமி)
கை (ஒழுக்கம், கரம்)
கோ (அரசன்)
சா (இறந்துபோ)
சீ (இகழ்ச்சி)
சே (உயர்வு)
சோ (மதில்)
தா (கொடு)
தீ (நெருப்பு)
தூ (தூய்மை)
தே (கடவுள்)
தை (தைத்தல், தை மாதம்)
நா (நாவு)



நீ (முன்னிலை ஒருமை)
நோ (அன்பு)
நை (இழிவு)
நோ (வறுமை)
பா (பாடல்)
பூ (மலர்)
பே (மேகம்)
பை (இளமை, பசுமை, கொள்கலம்)
போ (செல்)
மா (மரம்)
மீ (வான், மிகுதி)
மூ (மூப்பு)
மே (அன்பு)
மை (அஞ்சனம்)
மோ (முகத்தல்)
யா (அகலம்)
வா (அழைத்தல்)
வீ (மலர்)
வை (புல், இடு)
வௌ (கவர்)
நொ (நோய்)
து (உண்)

## தாவரங்களும் அவற்றின் இலைகளின் பெயர்களும்

ஆல், அரசு, மா, பலா, வாழை -இலை
அகத்தி, பசலை, முருங்கை -கீரை
அறுகு, கோரை -புல்
நெல், வரகு -தாள்
மல்லி -தழை
சப்பாத்திக் கள்ளி, தாழை -மடல்
கரும்பு, நாணல் -தோகை
பனை, தென்னை -ஓலை
கமுகு (பாக்கு)- கூந்தல்



## பிஞ்சுவகை - காய்களின் பிஞ்சுகளும் அவற்றின் பெயர்களும்

பூவோடு கூடிய இளம்பிஞ்சு -பூம்பிஞ்சு
இளங்காய்- பிஞ்சு
மாம்பிஞ்சு- வடு
பலாப்பிஞ்சு -மூசு
தென்னையின் இளம்பிஞ்சு- குரும்பை
பனையின் இளம்பிஞ்சு- குரும்பை
சிறுகுரும்பை -முட்டுக்குரும்பை
முற்றாத தேங்காய்- இளநீர்
இளம்பாக்கு -நுழாய்
இளநெல் -கருக்கல்
வாழைப்பிஞ்சு -கச்சல்
எள் பிஞ்சு -கவ்வை



## பாரதியார் கவிதை

யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய்
உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்
யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க்
குருடர்களாய்வாழ்கின்றோம்
ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்

உள்ளத்தில் உண்மையொளியுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல்
கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

# கல்விக்கதிர்

- அகரன் -



## 15 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய சுறா மீன் இனம்



கடந்த 20 வருடங்களுக்கு முன் இங்கிலாந்து நாட்டின் தெற்கு கடற்கரை பகுதியில் 15 கோடி ஆண்டுகள் பழமையான புதைப்படிவம் கண்டறியப்பட்டது.

தற்போது அந்த புதைப்படிவம் இங்கிலாந்தில் கிம்மெரிட்ஜ் என்ற ஊரில் உள்ள எட்சஸ் கலெக்சன் மியூசியம் ஆப் ஜுராஸிக் மரைன் லைப் என்ற மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த புதைப்படிவமானது சுறாமீன் குடும்பத்தை சார்ந்தது என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அரிய வகை சுறா மீன் இனமான இது முற்றிலும் அழிந்துபோய் விட்டன. இந்த சுறா மீனின் பற்களைக் கொண்டு, இந்த சுறா மீன் இந்த வகை குடும்பத்தை சார்ந் தது என்று கண்டறியப்பட்டுள்ளது. பெரும்பாலான புதைப்படிவ கண்டுபிடிப்புகளில் சுறாவின் பற்கள் கண்டறியப்பட்டுள்ளன.

வாழ்நாள் முழுவதும் சுறா வின் பற்கள் அடிக்கடி மாற்றப்படுவது தான் இதற்கு காரணம். சுறா மீனின் பற்களானது குருத்தெலும்புகளால் ஆனவையாம்.

இங்கிலாந்தின் வடக்கு கடலின் ஆழமற்ற அடுக்குகளில் காணப்பட்ட 15கோடி ஆண்டுகளுக்கு முன் ஜுராஸிக் காலத்தை சேர்ந்த பாறைப் படிவங்களில் இந்த அரிய வகை சுறா மீன் படிவத்தைக் கண்டறிந்துள்ளனர்.

இந்த புதைபடிவமானது 36 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றி, 6 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறு கோள் பூமியைத் தாக்கிய போது அழிந்து போனதாம். இதன் காரணமாக டைனோசர்கள் உட்பட அனைத்து தாவர மற்றும் விலங்குகளில் மூன்றில் ஒரு பகுதி உயிரினங்கள் அழிந்து போனதாம்.

சமீபத்தில் யேல் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் 19 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உலகின் 70 சதவீத சுறாமீன் இனங்கள் அழிந்து போனதை கண்டறிந்துள்ளனர்.

இருப்பினும் சுறா மீன் இனங்கள் அழிந்து போவதற்கான முழுமையான காரணத்தை விஞ்ஞானிகளால் கண்டறியமுடியவில்லை.

எட்சஸ் கலெக்சன் மியூசியம் அருங்காட்சியகத்தில் பெயர் குறிப்பிடப்படாத சுறாவின் எலும்புக்கூடுகள் உள்ளன.அவை இன்னும் சில வருடங்களில் ஆய்வு செய்யப்பட்டு அடையாளம் காணப்படும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் இந்த சுறா மீன்களின் வகைகள் கண்டறியப்பட்டால் அவை எந்த சுறா மீன் இனம், அதன் தன்மைகள் என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும்.

அழிந்து போன உயிரினம் குறித்து நாம் ஆய்வு செய்யும்போது அது வாழ்ந்த காலத்தில் பூமி எத்தகைய சுற்றுச்சூழலைக் கொண்டிருந்தது என்பதை அறிந்து கொள்ள முடியும். ஒவ்வொரு இயற்கை பேரழிவுகள் நேரும் போதும் பூமி தன்னைப் புதுப்பித்துக் கொண்டே உள்ளது.

மேலும் பூமியில் உள்ள உயிரினங்களும், சூழலுக்கு ஏற்ப தங்களது வடிவம் மற்றும் தன்மைகளையும் மாற்றிக்கொண்டே வந்துள்ளது. அதனை இந்த அழிந்து போன சுறா மீன் இனம் நமக்கு இன்னும் அழுத்தமாக தெரிவிக்கிறது.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 30th of October 2022



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com





Is pizza one of your favorite foods? If it is, you're not alone. Pizza is a very popular food. Every year, about three billion pizzas are sold in the United States. And kids like pizza more than any other type of food. For lunch or dinner, kids would rather eat pizza than anything else. Why do people love pizza so much? One reason is that pizza is easy to eat. You don't even need a knife or fork. Another reason is that there are many kinds of pizza. So no matter what your taste is, you can find a pizza you like. Pizza is also inexpensive. You can have a very tasty meal without spending a lot of money. And pizza lets you eat severaldifferent kinds of food at the same time. The sauce, the crust, the cheese, and the toppings all taste a little different. But they also taste very good together.

**1. What is this text about?**

A. food around the world B. cheap meals

C. pizza D. the United States

**2. According to the author, what is one reason people love pizza?**

A. Pizza is easy to eat.

B. Pizza is quick to make.

C. Pizza is small.

D. Pizza is spicy.



**3. Which word is an adjective?**

A. tasting B. tastes

C. taste D. tasty

**4. Which is a synonym for inexpensive?**

A. popular B. rare

C. costly D. cheap

**5. Which simile best fits this text?**

A. as long as a snake B. as tasty as pie

C. wet like the rain D. as round as the moon

---

Pizza has been around for longer than you might think. Ancient Egyptians and Greeks used to eat flat bread topped with olive oil and other things. Early Italians baked bread under hot stones. Then they topped the bread with spices and other ingredients. The pizza we know of began in 1889. It was made by Raffaele Esposito in Naples, Italy, in honor of a visiting king and queen. Many Italians came to the United States during the 1800s. They brought pizza with them. But most people in the United States did not know about pizza. It became popular after World War II. American soldiers ate pizza in Italy. They liked it and wanted more. When they came home from the war they wanted pizza at home. Soon pizza became popular all over the country!

**1. Which event in the text happened first?**

A. Raffaele Esposito made pizza in honor of a king and queen.

B. Early Italians baked bread under hot stones.

C. Pizza came to the United States.

D. Pizza became popular all over the United States.

**2. Which of these is not a fact in this text?**

A. Ancient Egyptians and Greeks ate flat bread with olive oil.

B. Many Italians came to the United States. They brought pizza with them.

C. Soldiers liked pizza and wanted more.

D. Pizza has only been around for a short time.

**3. Which of these phrases is a prepositional phrase?**

A. under hot stones B. baked bread

C. Early Italians baked D. Italians baked bread

**4. In this text, what does the word visiting mean?**

A. The king and queen ate pizza.

B. The king and queen lived in that town.

C. The king and queen did not live in that town.

D. The king and queen were hungry.

**5. What is the tone of the text?**

A. sad B. informative

C. condescending D. happy



How do chefs make pizza? They begin by mixing the ingredients for pizza dough. Pizza dough is made with flour, yeast, and water. After the dough is mixed, the chef lets the dough rise. Then, it is rolled flat into the round shape we know so well. Then, the chef spreads some tomato sauce on the dough. Next, the chef adds the toppings and the cheese. When the ingredients are all ready, the chef puts the pizza into a special pan. Then, the chef uses a special tool called a paddle to put the pizza into a flat oven. When the pizza is ready, the chef pulls it out. Now, the pizza is ready to enjoy

1. What does the pizza chef do right after adding the toppings and cheese?

A. The chef spreads some tomato sauce on the dough.

B. The chef adds the toppings.

C. The ingredients for the pizza dough are mixed.

D. The pizza is put into a special pizza pan.

2. What is this text mostly about?

A. how pizza is made

B. the history of pizza

C. where to find good pizza

D. different kinds of pizza



3. Which of the following is not an ingredient?

A. yeast B. flour

C. pizza D. water

4. What do chefs use to put pizza into an oven?

A. an ingredient

B. a paddle

C. a special oven

D. yeast

5. Which of these words is used in a series of steps?

A. adds B. cheese

C. toppings D. next

" TO BE PREPARED FOR WAR IS ONE OF THE BEST MEANS OF PRESERVING PEACE" - GEORGE WASHINGTON

# We Love Pizza!



Pizza is very popular all around the world. People from many different countries love to eat it. And in each country, the pizza is a little different. In Japan, for instance, there are two kinds of pizza. One kind looks like the pizza you are used to seeing, but it often has seafood on it. The other kind of Japanese pizza looks more like a pancake. The ingredients in that pizza are mixed up into the batter. Then, the batter is cooked like a pancake. Finally, the pizza is cut into slices, just like the pizza you are used to eating.

Many people in India also eat pizza. Pizza is a lot like an Indian bread called naan (nahn). Naan is like pizza dough. It is often brushed with butter and garlic. Indians like naan. So when pizza came to India, it soon became popular. In India, you can get pizza with pepperoni. You can also get pizza topped with tandoori chicken. You can get your pizza with tofu, too. Some Indians also add chili flakes and ketchup to their pizza.

Australians also love pizza. If you go to Australia, you can get a pizza with pepperoni. But you can also get a pizza with lamb or eggs. You can get a pizza with ham and pineapple. In fact, pineapple is the most popular pizza topping. Some Australians also like cut-up pumpkin on their pizza. Others like shrimp on their pizza.

There are many different ways to eat pizza. There are many different things you can put on your pizza. But no matter what's on a pizza, it's still a pizza. And people all over the world love it! What toppings do you like on your pizza?

## Read "We Love Pizza!" and then answer the questions.

**1. Who would be most interested in reading this text?**
A. someone who is interested in science topics
B. someone who reads history
C. someone who likes to do math
D. someone who enjoys cooking

**2. Which is the most accurate statement about the text?**
A. It is about different pizzas around the world.
B. It explains why pizza is unhealthy.
C. It is about many types of foods.
D. It is about eating pizza in America.

**3. What is the author's purpose?**
A. to describe pizza around the world
B. to get you to buy a lot of pizza
C. to explain how to make a pizza
D. to explain where to find pizza in your town

**4. Which is a topic sentence?**
A. Others like shrimp on their pizza.
B. One kind looks like the pizza you are used to seeing, but it often has seafood on it.
C. Many people in India also eat pizza.
D. Do you like a lot of toppings?

**5. Which is true for both India and Australia?**
A. You can get pizza with pumpkin.
B. You can get pizza with tandoori chicken.
C. You can get pizza with pepperoni.
D. You can get pizza with lamb.


**6. Pizza is similar to which food?**
A. shrimp B. naan
C. pineapple D. ham

**7. Which summarizes this text?**
A. Pizza is a healthy food for people all over the world.
B. Australians sometimes have egg or lamb on their pizza.
C. People in India love pizza.
D. People all over the world love pizza.

**8. Why did pizza quickly become popular in India?**
A. Pizza was invented in India.
B. People in India already liked naan, which is a lot like pizza.
C. People in India thought pizza was too spicy.
D. Pizza has many different ingredients



## KIDS SMALL STORY




One day a wolf was eating the flesh of an animal it had killed. A little bone got stuck in his throat, and he was unable to swallow it. He soon felt severe pain in his throat and raced up and down, trying to find a way to ease it. He begged everyone he saw to help him. Finally, the wolf came face to face with the crane.

"Please help me," the wolf pleaded. "I'll give you exactly what you want."

The crane agreed to give it a shot and instructed the Wolf to lie down on its side with its jaws spread as wide as it could. The crane then inserted its long neck into the Wolf's throat and pulled out the bone. The crane then requested its reward.

"Be joyful," the wolf added, grinning and showing his teeth. You've inserted your head into a Wolf's mouth and then taken it back out safely. Scroll down to enjoy the next story with moral in English.

**Moral of the story: Kindness and Greed cannot go hand in hand.**

# Velaikari




Vedhachalam Mudaliyar is a rich moneylender. Sarasa and Moorthy are his children. Sarasa takes after her father and behaves arrogantly with the servants. However, Moorthy is good human being and has a soft corner for the maid, Amirtham. Vedhachalam Mudaliar lends money to Sundaram Pillai. Unable to repay the borrowed money and finding it difficult to take Vedhachalam Mudaliar's insults, Sundaram Pillai commits suicide. His son Anandan witnesses the suicide and decides to take revenge on Mudaliar. While he sharpens the knife to kill Mudaliar, his friend Mani, a reformist and intellectual, advises him to sharpen his mind to take revenge. Reformed



Anandan, an ardent devotee of Goddess Kali, prays to the Goddess to help him take revenge on Mudaliar. However, Mudaliar becomes wealthier and becomes the owner of another estate, which infuriates Anandan.

Frustrated with the Goddess for helping the rich, Anandan abuses the Goddess at her temple. The devotees get angry with this behaviour of spoiling the sanctity and chase him away. Mani offers shelter to Anandan in a hideout where they find a dead body in a bundle. On close scrutiny, they realise that the body resembles Anandan; they learn from his diary that he is Paramanandam, son of a rich but blind landlady of Mevaar Vilasam. Mani brings Anandan to the village in the guise of Paramanandam. They host a tea party and invite all the rich people, including Mudaliar. As Paramanadham, Anandan soon marries Mudaliar's daughter Sarasa. To take revenge on Mudaliar, Anandan harasses Sarasa and spends their money lavishly. Acting like a drunkard and womaniser, he spoils Mudaliar's reputation in the society.

Discovering the love between Amirtham and Moorthy, Anandan creates a rift between his father-in-law and brother-in-law. Moorthi leaves the house, meets Amirtham and promises to marry her after getting the help of his friend at Madras. However, on realising that he is penniless, Moorthy's friends spurn him. Amirtham's father Murugesan, who is a loyal servant to Mudaliar's family, plans to get her married to an old man to avoid further embarrassment to his master. When Amirtham learns this, she leaves the home on her own. Balu Mudaliar, a rich man who becomes mentally disturbed after the death of his daughter, meets Amirtham. He thinks she is his daughter Sumirdham and provides her shelter at his place. At this doctor's request, Amirtham helps in Balu Mudaliar's recovery, who treats her like his own daughter and permits her to continue to live at his house even after his recovery.

Murthy gets wrong information that Amirtham is dead through her neighbours in the village. Vexed with life and to get peace, he lands in an ashram run by Yogi Hariharadas. However, he soon discovers the yogi's frauds and during an altercation with Moorthi, Yogi dies; Moorthi is accused of the murder and lands in prison. Mudaliar gets disheartened with the mishaps to his children. Mani brings Anandan as a North Indian lawyer to Mudaliar, and Anandan fights Moorthy's case in court.

Arguing beautifully in court, he establishes that, Yogi was a fraud and criminal wanted by the police; the death was not pre-planned or intentional; it happened during self-defence. That court acquits Moorthy and he is released. When Moorthy asks Anandan to name his fee for this great help. Anandan asks Moorthy to Marry Balu Mudaliar's daughter. Moorthy meets Amirtham, who is now known with a different name and is surprised that she looks similar to Amirtham. After the marriage takes place, Anandan reveals to Mudaliar that his son Moorthy has married Amirtham, a servant's daughter, and he (Anandan) is the son of the servant Sundaram Pillai. Berating Mudaliar about his arrogant attitude, money mindedness and treating people badly, he shows how it harmed poor people. Mudaliar regrets his behaviour and mistakes and apologises to Anandan and Amirtham. The family is united

# The Room



It was raining heavily that day. All the windows were shut tight. Marcus sauntered through the hallway, wondering what to do. He also was wondering if the walls of his house would suddenly crumble and break, since the rain,ten years ago started worsening, crumbling houses to pieces. Thunder roared. Marcus decided to lean against the wall as he felt tired of walking.

Marcus leaned. "AAHH!" he screamed. The wall rotated!He had discovered a secret room! He was met with a sight of astonishment.

Marcus saw money and gold, glittering. He couldn't hear the rain or thunder. It was a pin drop silence in the room, excepting Marcus's heart beat. Filled with greed, he took everything and filled his pockets. He did not care about whom it belonged to. Marcus left the room.

Instead of home, Marcus found himself in a dense forest. He realised that he was a kilometre away from his house. He ran home, tripping over vines in the heavy rain and flung open the door. Then, he jumped on the couch and thought, "Why did he not know this room till now? What did this mean? Did he steal the money and gold or was it for him? Why?". Marcus decided to lean against the wall again. The rain stopped. He put the wealth he had brought previously aside and leaned. It acted like a normal wall. " Maybe this wall brings me to the secret room only when it is raining"Marcus said. "Cccchh..." it started raining again.

Suddenly, his house started shaking vigorously.

*By:A.Nithun*

# Parasakthi




Parasakthi (transl. The Supreme Goddess; pronounced [para:sakti]) is a 1952 Indian Tamil-language drama film directed by Krishnan–Panju and written by M. Karunanidhi. The film stars V. C. Ganesan, S. V. Sahasranamam, S. S. Rajendran, Sriranjani Jr., and Pandari Bai. It is the cinematic acting debut of Ganesan and Rajendran. Based on Pavalar Balasundaram's play of the same name, Parasakthi narrates the misfortunes that befall the members of a Tamil family during World War II.

Central Studios initially planned on creating a film based on the Parasakthi play and T. S. Natarajan's play En Thangai; however, the idea was dropped after Natarajan objected. The film rights of Parasakthi were later bought by P. A. Perumal of National Pictures, with the patronage of A. V. Meiyappan. The soundtrack was composed by R. Sudarsanam, cinematography was handled by S. Maruti Rao, and Panju edited the film under the alias "Panjabi". Filming began in mid-1950, but took over two years to complete

Parasakthi was released on 17 October 1952, during the festive occasion of Diwali, and faced controversies because of its portrayal of Brahmins and Hindu customs and practices in a negative light. The elitarian society including the then ruling State government even demanded the film to be banned. Despite these protests, the film was praised for its dialogues and the actors' performances, and became a commercial success with a theatrical run of over 175 days. Parasakthi acquired cult status in Tamil cinema and became a trendsetter for dialogues and acting for later Tamil films.

Chandrasekaran, Gnanasekaran and Gunasekaran are three Indian immigrant brothers living in Rangoon, Burma with Chandrasekaran's wife Saraswati. Their younger sister Kalyani was raised in their home town Madurai, Tamil Nadu by their father Manickampillai. In 1942, during World War II, the three brothers and Saraswati plan to visit Madurai to attend the impending wedding of Kalyani to a writer named Thangappan. Due to war conditions and bombardment of Burmese ports by Japan, the shipping company offers only one ticket; Gunasekaran, the youngest brother, takes it and leaves for Tamil Nadu. The ship fails to reach on time due to the dangers of the war, and Kalyani's marriage takes place without any of her brothers present.

Kalyani becomes pregnant. But on the day she delivers her child, Thangappan dies in an accident and Manickampillai dies of shock, leaving Kalyani and her child destitute. Her house gets auctioned off, and she makes her living by selling food on the streets. Gunasekaran, after being stranded at sea for several months, finally arrives in Tamil Nadu at Madras. However, while watching a dance performance, he is robbed of all his belongings after being intoxicated. Impoverished, he becomes enraged at the status of the once glorious Tamil Nadu, and fakes insanity by indulging in numerous tricks to make a living. Gunasekaran finally comes across his destitute sister at Madurai, having learned of their father's death and her poverty. He continues to play insane and does not reveal his true identity to her due to his poverty, but hovers around her. Kalyani is irritated by the stranger's behaviour, unaware that he is her brother.

Kalyani is nearly molested by a vagabond named Venu, but is saved by Gunasekaran. She later leaves Madurai and arrives at Tiruchi, where she obtains work as a maid of blackmarketeer Narayana Pillai, who also tries to molest her. She is saved by his wife, and leaves the job. While searching for his sister, Gunasekaran reaches Tiruchi and comes across Vimala, a wealthy woman, to whom he explains the miserable status of him and his sister in the society. After resting in her house for a while, he silently leaves to continue searching for Kalyani.



As Japanese shelling intensifies in Burma, Chandrasekaran and Gnanasekaran decide to return to India. Chandrasekaran, accompanied by Saraswati, reaches Tiruchi safely and becomes a judge, but Gnanasekaran is lost in the journey and loses a leg in the shelling before arriving in India. He begs for a living, forms an association for beggars and tries to reform them. Kalyani reaches Chandrasekaran's palatial house seeking food, but Chandrasekaran throws her out without recognising her. She later arrives at a temple seeking help, but the pujari also tries to molest her. Frustrated with life and unable to feed her child, Kalyani throws it into a river and attempts suicide, but is soon arrested for killing the child and brought for trial.

At the court, Kalyani defends her act of infanticide with the judge being Chandrasekaran, who after hearing her story realises she is his sister, and faints. Gunasekaran is also brought to the court for having attacked the pujari who tried to molest his sister. During his trial, Gunasekaran explains the misfortunes which have befallen him and his family, and justifies his actions. Gunasekaran's valiant defence in the court awakens everyone on the ills of the society. As the trial proceeds, Vimala arrives and produces Kalyani's child, which was revealed to have safely fallen in her boat instead of the river. Kalyani and Gunasekaran are pardoned and acquitted by the court, and reunite with Chandrasekaran. Gnanasekaran, while collecting donations for his association of beggars, also joins them unexpectedly. With Vimala and Gunasekaran deciding to get married, the family subsequently inaugurates a welfare home for orphans.

# “வளரும் இளம் படைப்பாளி என்ற வகையில் எனக்கான இடமும் ஆதரவும் தாராளமாகவே கிடைக்கின்றன”




**வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர், கவிஞர் தெட்சணாமூர்த்தி கரிதரன் (சம்பூர் சமரன்) உடனான நேர்காணல்.**

**நேர்கண்டவர் - திருமலை தட்சா**

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**


நான் தெட்சணாமூர்த்தி கரிதரன். மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சம்பூரைச் சேர்ந்தவன். சம்பூர் சமரன் என்ற புனைபெயரில் இலக்கிய உலகில் சஞ்சரித்து வருகின்றேன். கிழக்கு பல்கலைக்கழகத்தில் வரலாறு இளங்கலைமாணி பட்டத்தையும், தேசிய நூலக சங்கத்தில் நூலகமும் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கையும் பூர்த்தி செய்துள்ளேன். தற்போது வரை வரலாறு பாட உதவி விரிவுரையாளராக பணியாற்றியுள்ள ஒரு விவசாயின் மகன்.

**02) கவிதைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் குறித்தும், அதனூடான முதற் பயணம் குறித்தும்?**

நான் சிறு வயதிலிருந்தே பாரதிதாசன் கவிதைகளினால் ஈர்க்கப்பட்டவன். என் மனதில் பட்டதை சொற்களில் எழுதத் தொடங்கினேன். அதன் பின்னர் கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி கிடைத்த வெற்றிகள் மற்றும் பெற்றோர், நண்பர்கள், விரிவுரையாளர்களின் ஊக்கப்படுத்தல்கள் மூலமாக ஆர்வம் மிகுந்தது. முதன் முதலாக தேசிய கலை இலக்கிய பேரவையின் சோஷலிச புரட்சியின் நூற்றாண்டு விழா கவிதைப் போட்டியில் தேசியளவில் கிடைத்த வெற்றி கவிதைப் பயணத்திற்கு அத்திவாரமிட்டது. முகநூல் மூலமான இலக்கியப் போட்டிகள் அதனை மென்மேலும் வளப்படுத்திச் சென்றன.

**03) கவிதைத் துறை தவிர வேறு திறமைகள் குறித்து?**

கவிதை எழுதுவதைத் தவிர சிறுகதை, பாடலாக்கம், சிறுவர் பாடல் போன்ற இலக்கியச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறேன். விழித்திரு என்ற விழிப்புணர்வு




குறும்படத்திலும் முக்கிய பாத்திரமேற்று நடித்துள்ளேன்.

**04) எழுத்துத் துறையில் இதுவரையில் உங்களது படைப்புகள் குறித்து?**

எனது முதல் படைப்பாக புலரும் புதுவிடியல் என்ற கவிதை நூலினை அண்மையில் வெளியீடு செய்துள்ளேன். வருங்காலத்தில் சிறுகதைத் தொகுப்பு வெளிவர உள்ளது. இதைத் தவிர, திருக்கோணேஸ்வரர் மீது பாடிய திரிகூட ஈஸ்வரனே பாடல் மற்றும் கொரோனா கால கல்வி நிலை பற்றிய என்னமோ நடக்குது என்ற பாடலும் வெளிவந்துள்ளன. இவற்றை ஆஸ்திரேலிய **Triple studio** நிறுவனம் தயாரித்திருந்தது. மேலும் சிறுகதை மஞ்சரி, காற்றுவெளி போன்ற சர்வதேச சஞ்சிகைகளில் எனது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. ஆஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் கவிதை பேசும் நேரம் என்ற பகுதியில்



எனது பத்திற்கும் மேற்பட்ட கவிதைகள் ஒலிபரப்பாகியுள்ளன. அத்துடன் பத்திரிகைகளிலும், யூடியூப் தளத்திலும் எனது படைப்புகள் வெளிவந்துள்ளன.

**05) நீங்கள் வாழும் கிராமத்தில் உங்கள் கலைக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

எனது கிராமமானது கலைப் பாரம்பரியம் மிக்கது என்பதனால் கலைக்கான வரவேற்பு அதிகமாகவே உள்ளது. இங்கு இடம்பெறும் கலை நிகழ்வுகளில் எனது கலையம்சங்களும் நிகழ்த்தப்பட்டுள்ளன. அதற்கான வாய்ப்பும் அதிகமாகவுள்ள பன்முகக் கலைஞர்கள் இங்கு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**06) திருகோணமலை மாவட்டத்தில் உங்கள் எழுத்துத் துறைக்கான அடையாளமும், அங்கீகாரமும் எவ்வாறு உள்ளது?**

எமது மாவட்டத்தினை பொறுத்த வரையில் எனது கலைக்கான அடையாளம் ஓரளவாக உள்ளது. வளரும் இளம் படைப்பாளி என்ற வகையில் எனக்கான இடமும், ஆதரவும் தாராளமாகவே கிடைக்கின்றன. சில இடங்களில் அங்கீகாரம் கிடைக்காது விட்டாலும் கூட பெரும்பாலான தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் இலக்கியச் செயற்பாட்டாளர்களின் தொடர்பும், ஆதரவும் கிடைத்த வண்ணமே உள்ளது. எதிர்காலத்தில் இது இன்னும் மேம்படலாம்.

**07) கடந்த வாரம் உங்களது கவிதை நூலான புலரும் புதுவிடியல் நூல் வெளியீட்டு விழாவானது மிகச் சிறப்பாக நடைபெற்றிருந்தது. அத் தருணம் குறித்து?**

எனது கவிதை நூலானது அச்சிடப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையில் வெளியீடு காண முடியாது தடைகள் பலவற்றை விடையாக கொண்டிருந்த இவ்வாறான நிலையில் அன்பின் பாதை சமூகத்தின் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் மற்றும் அதன் அனைத்து இலக்கிய ஆர்வலர்களும் இணைந்து நீட்டிய உதவிக்கரம் என்றும் மறக்க முடியாதது. அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பினால் தடையினைக் கடந்து எனது கவிதை நூல் வெளி வந்தது. சான்றோர்கள் அவையிலே எனை ஈன்று ஆளாக்கிய தெய்வங்களை கௌரவப்படுத்தியதோடு என் முதல் பிரசவமான புலரும் புதுவிடியல் வெளியீடு கண்டது. என்றுமே மனதில் இனிக்கின்ற தருணமாகவே பார்க்கின்றேன். இதற்காக உழைத்த அனைவருக்கும், அத் தருணத்தை நினைவூட்டிய உங்களுக்கும் என் நன்றி உரித்தாகட்டும்.

**08) தற்சமயம் இலக்கியத்துறையில் இளைஞர்கள் ஈடுபாடு காட்டி தங்களது திறமையின் அடையாளத்திற்காக பெரும் முயற்சி செய்து வருகின்றார்கள். அது குறித்து?**

இன்று இளைஞர்கள் இலக்கியத் துறையில் ஈடுபாடு காட்டும் முயற்சி மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. அத்துடன் தம் திறமைகளை இலைமறை காயாக ஒளித்து வைக்காமல் தகுந்த ஊடகத்தின் மூலம் அதனை வெளிப்படுத்துவது சாலச் சிறந்தது. இதன் மூலமாக தங்களது தனித்துவ அடையாளமான இலக்கியத் திறமைகளை மிகுந்த ஈடுபாட்டுடன் அடையாளப்படுத்த முடியும்.

**09) எழுத்துத் துறையில் நீங்கள் கைக்கொள்ளும் உத்திகள் குறித்து?**

எனது எழுத்துக்கள் எண்ணங்களின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டுமென நினைக்கிறேன். உண்மையான உணர்வின் வெளிப்பாடாக இருக்கும் போதுதான் அவை உயிர் பெறுகின்றன. என் கவிதைகளைப் பொறுத்த வரையில் எதுகை, மோனை, சந்தம், சீர், நாட்டார் மெட்டு, இலகு மொழி நடை, சூழ்நிலை விபரிப்பு போன்ற விடயங்களினால் அமையும். சிறுகதைகள் இதுவரை என் வாழ்வில் நான் கண்ட, கேட்ட, அனுபவித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு அவை பிரதேச பேச்சு வழக்கு, இலகு மொழி நடை, கதை சொல்லும் பாங்கு, வாழ்வியல் என்பவற்றை உத்திகளாக பயன்படுத்தி பண்பாடு, வரலாறு, கலாசாரம், மொழி போன்றவற்றை விட்டுவிடாது அவற்றின் தாக்கம் என் எழுத்துக்களின் ஆக்கமாக அமையுமாறு எழுதி வருகிறேன்.

**10) உங்களது கலைத்துறை மூலமான சமூக செயற்பாடுகள் குறித்து?**

சமூகத்தின் பிம்பமாகவே இலக்கியத்தைப் பார்க்கிறேன். சமூகத்தினை பிரதிபலித்து அதில் தாக்கத்தை செலுத்தவல்லன எழுத்துக்கள். நான் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலை கலாசார பீட மாணவனாக இருந்த காலத்தில் தமிழ் கலை மன்றம் எனும் இலக்கிய அமைப்பின் தலைவராக செயற்பட்டு பல்கலைக்கழக சமூகத்திலே கலை இலக்கிய பெருவிழா, நூல் அறிமுக விழா போன்றவற்றை தலைமையேற்று நடாத்தியுள்ளேன். தற்போது சம்பூர் தமிழ் கலா மன்ற உறுப்பினராகவும், எண்ணம் போல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பி னராகவும் இருப்பதோடு உள்நாட்டு, வெளிநாட்டு கவியரங் கங்களில் பங்கு கொண்டு கவிதையூடாக சமுக விழிப்புணர் வுக் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகிறேன். படிப்பினைக ளைத் தருகின்ற சிறுவர் பாடல்கள், சிறுகதைகளை பத்திரி கைகளிலும், முகநூலிலும் எழுதி வருகின்றேன். அத்துடன் கவிதை எழுத முயல்பவர்களுக்கு என்னுடைய ஊக்கப் படுத்தல்களையும் வழங்கி வருகிறேன்.

**11) இத்துறையில் உங்களுக்கு கிடைத்த வெற்றிகள், விருதுகள் குறித்து?**

கருவி மாற்றுத்திறனாளிகள் தின திறந்த கவிதைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம், **world vision lanka** நிறுவனத்தின் உலகத் தாய்மொழித் தினப் போட்டியில் முதலிடம், கொழும்பு புதிய அலை கலை வட்ட இலக்கியப் போட்டியில் தேசிய அளவில் முதலிடம், குருணாகல் மாவட்ட இளம் சோனக பட்டதாரிகள் சங்க ஆசிரியர் தினக் கவிதைப் போட்டியில் தேசியளவில் முதலிடம், கொழும்பு மத்தி ரொட்டரிக் கழக **Ink down** இலக்கிய கவிதைப் போட்டியில் முதலிடம், மூதூர் பிரதேச இலக்கிய விழா போட்டியில் பாடலாக்கம் முதலிடம், சிறுகதை இரண்டாமிடம், தமிழ் ஓசை பத்திரிகை தைப்பொங்கல் கவிப் போட்டியில் முதலிடம், அனாமிகா நினைவு தின கவிப் போட்டியில் இரண்டாமிடம், தேசிய கலை இலக்கியப் பேரவையின் சோஷலிச புரட்சி கவிதைப் போட்டியில் தேசிய அளவில் இரண்டாமிடம், பேராதனைப் பல்கலைக்கழக மகா மாணவர் ஒன்றிய மாணவ சாஹித்திய விழா போட்டியில் பாடலாக்கம் தேசிய அளவில் மூன்றாமிடம், தேனீ இலக்கிய மன்ற ஹைக்கூ கவி போட்டியில் தேசிய அளவில் மூன்றாமிடம், அனைத்துலக மனித உரிமைச் சங்கம் நடாத்திய யாழ் நூலக எரிப்பு 37ஆம் ஆண்டு நினைவுப் போட்டியில் உலகளாவிய ரீதியில் வெற்றி, ஈராக் தமிழ்ச் சங்க பணமுடிச்சு கவிதைப் போட்டியில் சர்வதேச அளவில் முதலிடம், இந்திய சாதனைப் பட்டியல் புத்தகத்தில் இடம்பிடித்த உலக சாதனை கவியரங்க பங்கேற்பாளர் சான்றிதழ், முகநூல் மூலமான கவிதைப் போட்டிகளில் 200ற்கும் மேற்பட்ட வெற்றிச் சான்றிதழ்களை இதுவரையில் பெற்றுள்ளேன்.

விருதுகள் என்ற வகையில் தமிழ் சேவை குழுமத்தின் காதல் கவிவானர் விருது(2018), தேடல் கலை இலக்கிய அமைப்பின் கவிநதி மற்றும் கவிக்கேசரி விருதுகள்(2021), நுட்பம் குழுமத்தின் நுட்பக்கவி விருது(2019), தேனீ கலை இலக்கிய மன்றத்தின் கவித்தேன் விருது(2021), இலக்கியத் துறைக்கான **south Asian Iconic** விருது(2022) என்பன. எனினும் இவற்றை விட துறைசார் பெரியோர்களின் ஆசிர்வாதங்களும், வாசகர்களின் இரசனைப் பகிர்வுமே எனக்கு பெறுமதிமிக்க விருதுகளாக அமைகின்றன.

**12) நிறைவாக, சாதிக்க நினைக்கும் இளைஞர்களுக்கு கூற விரும்புவது?**

ஒவ்வொரு மனிதர்களும் ஒவ்வொரு தனித்துவமான திறமைகளைக் கொண்டவர்கள். ஆர்வம் எப்போதுமே சூழ்நிலைக்கேற்ப மாறிக் கொள்ளும். ஆனால் திறமை அவ்வாறில்லை. எனவே திறமையை இன்னும் கூர்மையாக்கிக் கொண்டு அடைய வேண்டிய இலக்கினை உறுதியோடு போராடி வென்றிட வேண்டும். பிறந்தது வாழ்வதற்கே அந்த வாழ்க்கை எதிர்காலத்தவர்களுக்கு வழியாக இருக்க வேண்டும்.

**நன்றி!**

# ஓயாது பறப்புக்கள்

நாட்கள் விரைய..
நேரத்தின் வேகத்தில் பயணிக்க
நிமிடங்களால் மாத்திரம்
முடிகிறது
கடின இலக்கு ஒன்றினை
பறந்து கடக்க காதலை
விலைபேச கனலும் கண்கள்
முயன்று பார் முடியாவிட்டால்
மீண்டும் முயன்றுபார்.
இறப்பின் தறுவாயில் சரி
பிறப்பொன்று நிகழலாம்
அகிம்சையை கொன்றுவிட்டு
பிரம்மமுகூர்த்ததில்
விளக்கெரிப்பதில்
தோற்றுவிடுகிறது ஓர்
பெண்மை.
வாழ்வின் நிதர்சனத்தைப்
பங்குப்போட
அதே விரையும் நேரத்தை
காவல் தேடும்
ஓர் காற்று நிறைந்த பொம்மை
வேறான பயணத்தில்
அதே வேகத்தில் என்னையும்
கட்டிக்கொண்டு விரைகிறது
பரசூட் ஒன்று
விழுந்து விடாமல் தரித்தலை
சாதகமாகியிருக்கிறது
புதிதாய் முளைத்த சிறகுகள்.

–வசுமதி நிர்மல்–

# மரபுகளின் சிறைதனிலே

மாண்புறு மரபுகளால்
அரிதாரம் பூசிக்கொண்டு
அழுக்கு மனங்களுக்கு
அழகு சேர்க்கின்றோம்
சிரிக்கும் விலங்காக
நடிக்கும் இயந்திரமாய்
நாளையதை தொலைத்து
நிழலாகி வாழ்கின்றோம்
நேசம் என்பதுவும்
நெஞ்சம் என்பதுவும்
நடுவீதி வரைக்குமே
நிலையான ஒன்றல்ல
உன்னோடு பொருளிருப்பின்
உறவுகளும் உடனிருக்கும்
ஊமையாய் வாழ்ந்தாலும்
உன்குரலை ஊர்பேசும்
தீண்டாமை உனை தீண்டாது
திருவிழாக்கள்உனைதாண்டாது
தன்மானம்கண்திறந்துபார்க்காது
தரணியும்உனைப்பேசமறக்காது
சுயத்தோடு நீயும் வாழ்ந்துவிட
சர்வமும்இழக்கதுணிந்துவிடு...
உன்வாழ்வைதெளிந்துவாழ்ந்து
விடு..
உலகை உனதாக்கி மகிழ்ந்து
விடு.....

- கனக.தீபகாந்தன்-

# கலைவக் கதிர்




## இலக்கிய சுவை காதல்



காதல் உங்களை கடக்கவில்லை என்றாலும், கா தலை நீங்கள் கடக்கவில்லை என்றாலும் வாழ்ந்ததுக்கான அர்த்தம் குறைவு. காதல் என்ற சொல் காதுக்கு இனிமையானது, பலரின் வாழ்க்கையில் கசப்பானது. காதல் என்ற சொல்லின் இருந்து தான் கவிதை, காவியம், கருணை, கல்யாணம், கலவி, காமம், கவலை, கண்ணீர், கைகலப்பு, கல்லறை என்ற சொல்லுக்கு வழி செல்கிறது. காதல் உச்சரிக்க, உணர சுகமானது, ஆனால் பலருக்கு வாழ கடினமானது. பட்டாம்பூச்சிகள் பறக்க, தேனீக்கள் ரீங்காரம் பாட, மலரினும் மென்மையாக தொடங்கி, பல சந்தோசத் தருணங்களை அள்ளித் தருவது.

காதல் இல்லை என்றால் இன்றைய சினிமாவில் டூயட் பாடல்களோ, சோகப் பாடல்களோ இடம் பெறாது. சிறகுகள் இல்லாமல் நம்மை பறக்கச் செய்வது, காய



## இலக்கிய நயம்

மோ, வெட்டோ இல்லாமல் வலிக்கச் செய்வது.

### குறுந்தொகையின் சிறப்பு

தமிழில் காதல் பற்றி கூறும் நூல்கள் ஏராளம். பதினெண் மேல் கணக்கு நூல்களுள் அகப் பாடல்களே அதிகம் இடம் பெற்றுள்ளன. அப்படி உள்ள பாடல்களில் காதலின் பல்வேறு கூறுகளை பற்றி கூறும் சிறப்பான தொகுப்பு (தொகை) நூல் குறுந்தொகை ஆகும். குறுந்தொகை நான்கு முதல் எட்டு அடிகள் கொண்ட பாடல்களை கெண்டு இருப்பதால் குறுந்தொகை என்று அழைக்கப் படுகிறது. கி.மு இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரை வாழ்ந்த சுமார் இருநூறு புலவர்களால் பாடப் பெற்ற நானூறு பாடல்கள் கொண்ட தொகுப்பு நூலாகும்.

காதலிப்பவர்கள், காதலிக்க நினைப்பவர்கள், காதலில் துன்பப்பட்டவர்கள், காதல் கவிதை எழுதுவோர் என்று அனைவருக்கும் இதில் பாடல்கள் உள்ளன.

புறப்பாடல்களில் அப்பாடல் யாருக்குக்காக பாடப்பட்டது என்ற குறிப்பு இருக்கும், இதை கெண்டு தான் நாம் அதியமானை, கபிலரை, வல் வில் ஓரியை, பாரியை அடையாளம் காண முடிகிறது. ஆனால் தொல்காப்பியம் கூறும் இலக்கண மரபுப்படி அகப்பாடல்களில் இன்னாருக்கு இது பாடப்பட்டது என்ற குறிப்பு குறுந்தொகை பாடல்களில் இல்லை. (இது இவர்களின் அந்தரங்க விஷயம் என்ற காரணத்தால், பாடப்பட்டவரின் குறிப்பு இல்லாமல் பாடும் நாகரீகம் தமிழ் மரபில் இருந்தது). தலைவன், தலைவி, பாங்கன், தோழி, செவிலி என்ற பாத்திரங்கள் அடிப்படையில் தான் பாடல்கள் எழுதப்பட்டன.



### தமிழின் சிறப்பு

மற்ற மொழிகளில் இல்லாத ஒரு பெரும் சிறப்பு தமிழில் காணப்படும் திணை இலக்கணமும், அதற்குரிய பாடல் அமைப்பும் தான், பொதுவாக எல்லா மொழிகளும் கூறும் காலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று மூன்று கூறுகள் தான். இடம், காலம், நேரம் பொ றுத்து மாறுவது மனித மனதின் குணமாகும். நன்றாக குளிர் உள்ள இடத்தில், பனிக்காலத்தில் இருக்கும் காதல் நெருக்கம், வறண்ட நிலத்தில், வேனிர் காலத்தில் இருப்பதில்லை. இப்படி உள்ள இடம், சூழ்நிலை, காலம், நேரம் ஆகியவைகளை பிரித்து ஐந்திணை இலக்கணமாக கூறுவது தமிழில் உள்ள தனிப் பெரும் சிறப்பாகும். மேலும் மறை பொருள் அல்லது இறைச்சி என்று கூறப் படும் உள்ளார்ந்த அர்த்தமும், ஆழ்ந்த கருத்துகளும் அகப்பாடல்களின் சிறப்பு அம்சமாகும்.

குறுந்தொகையை ரசிப்பதற்கு முன்னர் இந்த ஐந் திணை என்றால் என்ன, அவற்றின் உட்கூறுகள் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்வது அவசியம்.

# நினைவுகளின் ஊர்வலம்

காணாமல் கண்கள் தெருவெங்கும் தேடும்
கண்டாலோ அதுவே நோக்காமல் நானும்
அனலிட்ட மனது அலையெனவே ஆடும்
அருகினிலே வந்தாலே பனிக்கூழாக கரையும்
தூரத்தில் உன் உருவம் புள்ளியாய் மறையும்
பின் இருக்கையில் இருதயம் தாவிக்கொள்ள ஏங்கும்
நீ செல்லும் வழிகள் இரு விழியும் அறியும்
ஆனாலும் அன்பே தொடர்ந்திடவா முடியும்?

- தீபதனு -திருகோணமலை -

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## காங்கிரஸ் அமைச்சர் சிதம்பரத்தின் முன்னெடுப்பு

அங்கம் - 165

சிதம்பரம் முன்வைத்த கோரிக்கை பற்றி சர்ச்சைகள் உண்டு.

அதனைப் பற்றி பிரபாகரனுடன் நேரடியாக அவர் பேசினாரா அல்லது விடுதலை புலிகளின் மற்றத் தலைவர்களோடு மட்டும் தொடர்பு கொண்டாரா என்பதில் தெளிவில்லை.

இந்த முன்னெடுப்பு தமிழ்நாட்டில் இருந்த தமிழ் அகதிகளின் தலைவர்கள் மாநில அரசியல் கட்சிகளுக்கு - காங்கிரஸ் உள்பட -கொடுத்த அழுத்தங்களால் நடந்தது.

ஒரு பகுதி, சிதம்பரம் பிரபாகரனுடன் நேரடியாகப் பேச முயற்சித்த போதும் அவர் களத்தில் நிற்பதால் தொடர்புகள் தருவது கடினம் என தெரிவிக்கப்பட்டதால் மற்றவர்களுடன் பேசி ஆவணம் அனுப்புவதாகக் கூறினார் எனக் குறிப்பிடுகின்றது.

இன்னும் ஒரு பகுதி, ஆவணத்தை நேரடியாகப் பிரபாகரனிடம் கையளிப்பதற்காக நம்பிக்கையான இடைப்பட்டவர் அதனை தமிழ்நாட்டில் இருந்து கொண்டு சென்றாலும், யுத்த முனையில் நின்ற பிரபாகரனைப் பார்க்க முடியாது என்றும், அதனைத் தங்களிடம் கையளித்து விட்டுப் போகலாம் என கூறப்பட்டதாகவும், அவர் பதிலுக்காக சில நாள்கள் இருந்து விட்டு திரும்பினார் எனவும் பதிவிடப்படுகிறது.

இந்தப் பதிவுகள் அந்தக் கோரிக்கை இந்திய அரசின் உயர்மட்ட அமைச்சரிடம் இருந்து வந்தபோது பிரபாகரன் அவற்றை உதாசீனப்படுத்தவில்லை, ஆனால் அவர் அவற்றை அறிந்திருக்கவில்லை என்ற விளக்கங்களின் ஆதரவுக்காக இருக்கலாம்.

ஆனால் அப்படி ஒரு முயற்சி இருந்தது. நடந்தது என்னவென்றால் அந்த முயற்சி விடுதலை புலிகளுக்கு ஆதரவான - அதே சமயம் தி.மு.கவை விமர்சிக்கும் - வைகோவுக்கும் தெரிய வந்திருக்கிறது. தயாரிக்கப்பட்ட ஆவணத்தின் பிரதி ஒன்றையும் ஏதோ ஒரு விதத்தில் வைகோ பெற்றுவிடுகிறார். வைகோவும் அவரது தோழர்களும் இது காங்கிரஸின் ஏமாற்று வித்தையின் ஒரு யுக்தி எனவும், இதனை ஏற்காது நிராகரிக்குமாறும் விடுதலை புலிகளின் தலைவர்களுக்கும் அவர்களின் புலம்பெயர் அமைப்புக்களும் புத்திமதிகள் தருவது மட்டுமல்லாமல், 2009 மே நடுப்பகுதியில் நடக்கும் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் வெற்றி நிச்சயம், அவர்கள் வந்தவுடன் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தருவார்கள், யுத்தம் நிறுத்தப்படும் என்ற உத்தரவாதங்களும் தரப்பட்டன. உளவுகளால் இந்த முயற்சிகளை அறிந்து கொண்ட ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் மேலும் காத்திருக்க விரும்பாது, தங்களது தாக்குதல்களுக்கான திட்டங்களை விரைந்து வகுத்தன. இதன் பகுதியாக நோர்வேயின் அனுசரணையோ, சமாதான தூதுகளோ தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது

நோர்வையின் அனுசரணைகளால் தங்களுக்கு அழுத்தங்கள் தவிர, ஆதரவுகள் கிடைக்கவில்லை, அதனால் அவர்கள் தொடர்ந்து ஈடுபடுவது தேவையில்லை என்ற கருத்துக்கள் முடிவுக்கான போர் திட்டமிட்ட பொழுதிலிருந்து அவர்களுக்கு (நோர்வேத் தரப்புக்கு) தெரிவிக்கப்பட்டது.

12 ஏப்ரல் 2009 சர்வதேச அழுத்தங்களுக்காகவும் ஸ்ரீலங்காவுக்கு எதிராகவும் போராட்டங்களை நோர்வே தமிழ் புலம்பெயர் மக்கள் நோர்வேயில் உள்ள ஸ்ரீலங்காவின் தூதரகத்திற்கு முன் நடத்திய போது அவர்கள் தூதரகத்தை ஆக்கிரமித்து, சேதங்களை விளைவித்தமை பெருத்த வெறுப்பை நோர்வேக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு மட்டத்தில் ஏற்படுத்தியது. நோர்வே அரசாங்கம் நடந்த சம்பவங்களுக்காக ஸ்ரீலங்கா அரசுக்கு மன்னிப்பு தெரிவித்தாலும், அவர்களின் அப்போதைய வெளி விவகார அமைச்சர் 'இப்படியான சம்பவங்



கள் எல்லாம் நடக்கும் போது நோர்வே சமாதான அனுசரணையாளர்களாக சமாதானத்தை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் என்று நாம் கருதவில்லை' என வெளிப்படையாகத் தெரிவித்தார்.

போரின் கடைசி நேர கட்டங்கள் விடுதலைப் புலிகளின் தலைமைகளிடையே கருத்து வேறுபாடுகளை தோற்றுவித்தன. ஒரு சிலர் தரப்படும் சந்தர்ப்பங்களை ஏற்று, சரணடைந்து, மக்களையும் வெளியேற்ற வேண்டும் என அபிப்பிராயப்பட்டனர். இவர்களுக்கு ஆதரவாக விடுதலைப் புலிகளின் போராளிகளாக, திருமணம் செய்து, இளம் குழந்தைகளுடன் இருந்தோர், பாசங்களால் ஆட்கொள்ளப்பட்டு, தங்கள் குழந்தைகளாவது வாழ வேண்டும் எனவும், அதற்கான நல்ல தீர்மானத்தை பிரபாகரன் எடுக்க வேண்டும் எனவும் அவரிடம் விண்ணப்பித்தனர்.

இன்னும் ஒரு சாரார், தாங்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழிகளின் ஆணைப் படி, ஆயுதங்களை கையளிக்கக் கூடாது, சரணடைவதைப் பற்றி சிந்திக்கத் தேவையில்லை, கடைசி வரைப் போராடுவது எனத் தீர்மானித்தார்கள்.

இன்னும் ஒரு பகுதி தற்கொலைத் தாக்குதல்களால் இராணுவப் படைகளின் கட்டமைப்பைச் சில இடங்களில் உடைத்து, அவர்கள் சிதறி நிலை குலைந்த வேளையில், பிரபாகரனும் சிலரும் வெளியேறி போர் வலயத்தைக் கடந்து விட்டால், கொரில்லா தாக்குதல் வழியாகவும் வரக் கூடிய வேற்று உதவிகளால் மீண்டும் மேலெழுந்து வரலாம் எனக் கணித்தனர்.

ஒருமித்த நிலை இல்லாததால் ஒவ் வொரு அணியும் தாங்கள் எண்ணியபடி முன்னெடுப்புகள் செய்தனர்.

இவர்களில் சரணடைவதை ஏற்றுக் கொண்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பகுதியின் தலைவர் நடேசன், அவரின் சமாதானச் செயலகத்தின் பொறுப்பாளராக இருந்த புலித்தேவன் போன்றோர் தங்களின் தொடர்புகளால் நோர்வே அனுசரணையாளர்களையும், பிரித்தானியா, அமெரிக்க தூதரகங்களையும், செஞ்சிலுவைச் சர்வ தேச குழுவையும், தமிழ் அரசியல்வாதி சந்திரநேரு, ஊடகவியலாளர் மேரி கொல்வின் போன்ற பலரைத் தொடர்பு கொண்டு, தங்களுடைய சரணடைவுகளுக்கு ஏற்பாடுகள் செய்து தருமாறு கேட்டமையோடு, தங்களது புலம்பெயர் ஆதரவாளர்களுக்கும் களத்தின் நிலைமைகளை வெளிப்படுத்தி சரணடைவுக்கான உதவிகளைச் செய்து தருமாறு விளங்கப்படுத்தினர்.

சரணடையும் ஆயத்தங்கள் சிலரால் மேற்கொள்ளப்படுகின்றன, ஆனால் மற்றவர்கள் நின்று கடைசி வரைக்கும் போரிடுவார்கள் என்ற அங்கலாய்ப்புக்களால் மக்கள் கலவரம் அடைந்து, விடுதலைப் புலிகளின் தடைகளையும் உத்தரவுகளையும் மீறி 14 மே 2009 சூனியப் பிரதேசத்தை பிரித்த குளத்திலும் நீரோடையிலும் விழுந்து வெளியேற முயன்ற போது - 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட அவர்கள் - மீது இரு பகுதிகளாலும் ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட பலர் உயிரிழந்தனர்.

சரணடைய விரும்பியவர்களின் கோரிக்கைகளை ஏற்று, அரசு அவசரமான பேச்சுக்களை ஏற்படுத்தி, கடைசியாக ஜனாதிபதியின் ஆலோசகராகவும் இருந்த பஸில் ராஜபக்ஷ தந்த ஏற்பாட்டின் படி, அவர்கள் வெள்ளை கோடிகளை உயரத் தூக்கிப் படி, இராணுவத்தினரிடம் சரணடைவை ஏற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் தரப்பட்ட அறிவுரைகளில் தாங்கள் தொடர்புகளில் இருந்தவர்களிடம் அறிவித்து, 17 மே 2009 பின்னிரவு - 18 மே 2019 அதிகாலை வேளை வெள்ளைக் கொடிகளுடன் சரணடைவதற்காக இராணுவத்தை நோக்கி நடந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டனர்.



பிரபாகரனும் மெய்ப்பாவலர்களும் சகாக்களும் மே 18, 2009 தடைகளை உடைத்து வெளியேற ஏற்படுத்திய முயற்சி இராணுவத்தினால் முறியடிக்கப்பட்டு, அவரும் கொல்லப்பட்டார் என்ற வெற்றிச் செய்தியும், அவருடன் கடல் தளபதி சூசை, புலனாய்வு பிரிவின் பொட்டு அம்மான் எல்லோரும் சாகடிக்கப்பட்டார்கள் என தெரிவிக்கப்பட்டு, போர் வலயத்தில் அகப்பட்டிருந்த மக்கள் இராணுவத்தினால் ஏற்படுத்தப்பட்ட - அவர்களால் கட்டுப்படுத்தப்பட்ட - முகாம்களுக்கு மாற்றப்பட்டனர்.

சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டமையும், மக்கள் கையளித்த உறவுகள் பின்னர் விடுதலை புலிகளாக அடையாளம் காணப்பட்டு எது வித விசாரணைகளும் இன்றி சுட்டுக் கொல்லப்பட்டமையும் இவர்களை இன்னும் வைத்து மேலும் பல வருடங்களுக்குப் பிரச்சினைகளை வளர்க்க வேண்டுமா என்ற மேற்கத்திய நாடுகள் தவிர்ந்த கோட்டாபய ராஜபக்ஷவின் நண்பர்களின் புத்திமதிகளை ஏற்று தங்களை யாரும் தட்டிக் கேட்க முடியாது என்ற இறுமாப்பில் அவர் நடத்தியவை.

கடைசி நாள் 18 மே 2009 நடந்த தாக்குதல்களிலேயே இறந்தவர்கள் ஆயிரம் முதல் நாலாயிரம் வரை என அங்கிருந்து வெளியேறியவர்களின் தகவல்களில் இருந்து கணக்கெடுக்கக் கூடியதாக இருந்தது. ஸ்ரீலங்கா இராணுவம் கணக்கெடுப்பையோ, இறந்தவர்களின் அடையாளங்களையோ பதியவில்லை.

சர்வதேச அமைப்புக்கள் இவ்வாறான கடைசி நாள்களில் போரில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இறந்துள்ளனர் என கணித்தன. தமிழர்களுக்கு ஆதரவாக - விடுதலைப் புலிகளுக்கு தோழனாக - இருந்த தி.மு.கவின் கருணாநிதியும் இந்த அழிப்புகளால் அதிர்ந்தார்.

(வளரும்...)

# இயேசுவோடு சக்கேயு எடுத்த செல்ஃபி

- அருள்திரு யேசு கருணாநிதி -
(மதுரை உயர்மறைமாவட்டம்)



அவன் ஒரு மெழுகுதிரி வியாபாரி. ஆலயத்திற்குத் தேவையான தேன் மெழுகுதிரிகளைச் செய்து விற்றான் அவன். அவனை யாருக்கும் பிடிப்பதில்லை. ‘அவன் மீதமான மெழுகைத் திருடி புதிய மெழுகோடு கலக்கிறான்’ என்றும், ‘அவன் விலையைக் கூட்டி விற்கிறான்’ என்றும், ‘அவன் தனக்குக் கீழிருப்பவர்களின் உழைப்பைச் சுரண்டுகிறான்’ என்றும் சொல்லி மக்கள் அவனை வெறுத்தார்கள். அவனுடைய பங்கு ஆலயத்திற்கு திருத்தந்தை பிரான்சிஸ் வருவதாகச் சொல்லப்பட்டது. திருத்தந்தையைப் பார்க்க இவனுக்கு ஆசை. எப்படியாவது அவரைப் பார்த்துவிடலாம் என நினைக்கிறான். ஆனால், நாள்கள் நெருங்க நெருங்க நிறையக் கூட்டம் வந்து சேர்கிறது. ‘பார்க்க முடியாமல் போய்விடுமோ?’ என்ற அச்சம் இவனுக்கு வர ஆரம்பிக்கிறது. பாதுகாப்பு காரணங்களுக்காக ஆலயத்திற்குள் வெகுசிலரே அனுமதிக்கப்படுவர் என்றும், அதற்கான முன்பதிவு செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. சொல்லப்பட்ட சில நொடிகளில் முன்பதிவும் முடிந்தது. பங்குத்தந்தையிடம் சென்று முறையிட்டான். கெஞ்சிக் கேட்டான். ஆலயத்திற்குள் எப்படியாவது சென்றுவிட வேண்டும் என நினைக்கிறான். திருத்தந்தை வரும் நாள் வந்தது. சட்டென்று ஒரு முடிவு எடுக்கிறான். திருத்தந்தைக்கான ஆளுயர மெழுகுவர்த்தி என்று ஒன்றை உருவாக்கி, அந்த மெழுகுதிரிக்குள் தானே நின்றுகொள்கின்றான். பவனியில் வந்த திருத்தந்தையைக் கவர்கிறது மெழுகுதிரி. ஒரு நிமிடம் நிற்கின்றார். ‘இதை யார் செய்தது?’ எனக் கேட்கிறார். ‘நான்தான்!’ எனத் துள்ளிக்குதித்து அதிலிருந்து வெளியே வருகிறான் வியாபாரி.

‘இங்கே என்ன செய்கிறாய்?’
‘நான் உங்களைப் பார்க்க வேண்டும்.’
‘நானும் உன்னைப் பார்க்க வேண்டும்.’

ஏறக்குறைய இக்கற்பனை நிகழ்வைப் போலத்தான் அரங்கேறுகிறது இன்றைய நற்செய்தி வாசகத்தின் (காண். லூக் 19:1–10) கதையாடல். ‘இயேசுவைத் தன்னுடைய குட்டிக் கமராவில் எப்படியாவது ஃபோட்டோ எடுத்துவிட வேண்டும்!’ என்று நினைக்கின்ற சக்கேயுவின் அருகில் வருகின்ற இயேசு, ‘நான் உன்னோடு ஒரு செல்ஃபி எடுக்க வேண்டும்!’ எனக் கேட்கின்றார். சக்கேயுவின் மனதில் எவ்வளவு ஆனந்தம்! ‘என்னோடவா?’ ‘செல்ஃபியா?’ ‘ஐயோ! என்னால் தாங்க முடியவில்லையே! நான் இந்த செல்ஃபியை வாட்ஸ்ஆப் டிபியாக வைத்துக்கொள்வேன்! ஸ்டேடஸ் போடுவேன்! ஃபேஸ்புக்கில் பதிவேற்றுவேன்! இயேசுவுடைய ஃபோன் நம்பர் வாங்கி அவருடைய கான்டக்ட் ப்ரொஃபைலாக வைத்துக்கொள்வேன் ... இல்லை! இல்லை! என் ஃபோனில் வால்பேப்பராக வைத்துக்கொள்வேன்!’ என்று சக்கேயுவின் மனத்தில் கம்பி மத்தாப்பு ஆயிரம் எரிகிறது.

‘சக்கேயு’ என்ற இடத்தில் உங்களையோ என்னையோ வைத்துப் பார்ப்போம்.

‘செல்ஃபி வித் சக்கேயு’ என்று இயேசு சொல்வதுபோல, நம்மை நினைத்து அவர், ‘செல்ஃபி வித் எக்ஸ்,’ ‘செல்ஃபி வித் ஒய்’ என்று சொன்னால் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்.

## 1. சக்கேயு என்றால் யார்?

‘சக்கேயுஸ்’ என்றால் அரமேயம் மற்றும் எபிரேயத்தில் ‘புனிதம்’ அல்லது ‘தூய்மை’ அல்லது ’குழந்தையுள்ளம்’ என்று பொருள். லூக்கா இந்தப் பெயரைத் தெரிந்தெடுத்தாரா? அல்லது கதைமாந்தரின் இயல்பான பெயரே இதுவா? என்பது நமக்குத் தெரியவில்லை.

இவரை மூன்று வார்த்தைகளால் வர்ணிக்கிறார் லூக்கா: (அ) சக்கேயு என்பவர் செல்வர் – வரிதண்டுபவர்களுக்குத் தலைவர், (ஆ) சக்கேயு இயேசுவைக் காண விரும்பினார், (இ) சக்கேயு குட்டையாய் இருந்தார்.

### (அ) சக்கேயு என்பவர் செல்வர் - வரிதண்டுபவர்களுக்குத் தலைவர்

லூக்கா நற்செய்தியைப் பொறுத்தவரையில் செல்வமும் கடவுளும் நேர் – எதிராக இருப்பவை(வர்). செல்வர் விண்ணரசில் நுழைவதில்லை (காண். 16:19–31), செல்வர் இயேசுவைப் பின்பற்றத் தயங்குகின்றனர் (காண். 18:18–27). இங்கே, சக்கேயுவை செல்வர் என்று சொல்வதோடல்லாமல், அவரை ‘வரிதண்டுபவர்களின் தலைவர்’ என அறிமுகம் செய்கிறார் லூக்கா. சக்கேயுவின் செல்வம் மட்டுமல்ல, அவர் அச்செல்வத்தை எப்படி ஈட்டினார் என்பதும் இங்கே சொல்லப்படுகிறது. சக்கேயு யூதராக இருந்தும், தன் யூத மக்களிடம் வரிவசூலிக்கும் உரோமை அரசின் கைக்கூலியாக இருக்கின்றார். ஆக, உரோமைக்கும் இவர் அடிமையாக இருக்க வேண்டும், வரி தராவிட்டால் தன் இனத்து மக்களையும் கொடுமைப்படுத்த வேண்டும். மேலும், வரிதண்டுபவர்கள் சரியாகக் கணக்குக் கொடுப்பதில்லை. இவ்வாறு, இவர் அநீத செல்வத்திற்குச் சொந்தக்காரராக இருக்கின்றார். தன்னுடைய சொந்த மக்களால் புறக்கணிக்கப்படுகின்றார். இவ்வாறு, செல்வர் என்ற நிலையில் கடவுளிடமிருந்தும், வரிவாங்குபவர் என்ற நிலையில் தன் சொந்த மக்களிடமிருந்தும் அந்நியப்பட்டு நிற்கின்றார் சக்கேயு.

### (ஆ) சக்கேயு இயேசுவைக் காண விரும்பினார்

லூக் 17:15ல் தான் நலம் பெற்றதை உடலில் ‘காண்கின்ற’ சமாரியத் தொழுநோயாளர் உடனடியாக இயேசுவிடம் திரும்புகின்றார். இதற்கு முந்தைய பகுதியில் (காண். 18:35–43) பார்வையற்ற ஒருவர் பார்வை பெறுகிறார். இங்கே சக்கேயு இயேசுவைக் ‘காண’ விரும்புகிறார். ‘காணுதல்’ என்பது லூக்காவின் ஒரு முக்கியமான கருத்துரு. இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நிகழ்வில் இதை சிமியோன் வழியாக மிக அழகாக அறிமுகம் செய்கிறார் லூக்கா: ‘மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன’ (2:30–31). சக்கேயு நிகழ்விலும் ‘மக்கள் அனைவரும் காணுமாறு மரத்தில் ஏறி நின்ற சக்கேயுவின் கண்கள் இயேசுவைக் கண்டுகொள்கின்றன.’ இயேசுவும் நிகழ்வின் இறுதியில், ‘இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று’ என்கிறார். ஆக, காணுதல் என்பது மீட்பைத் தேடுதல் அல்லது தேடிக் கண்டடைதல் என்றும் பொருள்கொள்ளப்படுகிறது.

### இ. சக்கேயு குட்டையாய் இருந்தார்

இது அவருடைய உடல்தன்மையை மட்டும் குறிப்பது அல்ல. மாறாக, அவர் அனுபவித்த உள்ளத்து உணர்வுகளான வெட்கம், பொய், போலித்தன்மை, அவமானம் ஆகியவற்றையும் குறிக்கின்றன. நாமே இதை அனுபவித்திருப்போம். தவறு செய்யாதபோது நம்மை அறியாமலேயே நாம் நேராக நிற்போம், நெஞ்சம் நிமிர்ந்து நிற்கும். நாம் எல்லாரையும் விட பெரியவர்களாகத் தெரிவோம். ஆனால், ஏதாவது பொய் அல்லது களவு செய்யும்போது, தவறு செய்யும்போது நாம் என்னதான் நம் மனச்சான்றைச் சாந்தப்படுத்த நினைத்தாலும் நம் உடலின் தன்மையையை அது கூனாக்கி விடும். அடுத்தவர் முன் நாம் மிகச்சிறியவர்களாகத் தெரிவது போல உணர்வோம். ஆக, சக்கேயு உடல் அளவில் குட்டையாக இருந்தாலும், உள்ளத்து அளவிலும் குட்டையாக உணர்கின்றார். மற்றவர்கள் முன் சேர்ந்து நிற்பதற்குப் பதிலாக – அவர்கள் ஒருவேளை அவரை விரட்டிவிடக் கூடும் – மரத்தில் ஏறி நின்றுகொள்கின்றார். அல்லது, தன்னுடைய தாழ்வு மனப்பான்மையை இப்படிப் போலியாக உயர்வு மனப்பான்மையாக ஈடுகட்டிக்கொள்ள விரும்புகின்றார்.

## 2. மற்றவர்கள் சக்கேயுவை எப்படிப் பார்த்தார்கள்?

முதலில், கூட்டத்தினர். கூட்டத்தினர் இவரை வெறுத்தார்கள். சிலர் கண்டுகொள்ளாமல் இருந்தார்கள். சிலர் அவரிடம் இணக்கமாக இருந்தால் தங்களுக்கு இவர் உதவி செய்வார் என்று போலியாக அன்பு காட்டினர். இவ்வாறாக, மற்றவர்களிடமிருந்து இவர் வெறுப்பையும், கண்டுகொள்ளாத்தன்மையையும், போலியான அன்பையும் மட்டுமே பெற்றார். மேலும், கூட்டத்தினர், ‘பாவியோடு தங்கப்போயிருக்கிறாரே இவர்’ என்று இயேசுவையும் வெறுக்கின்றனர்.

இரண்டாவது இயேசு. ஆனால், இயேசு அவரை ‘ஆபிரகாமின் மகன்’ என்றும், ‘இழந்து போனதைத் தேடி மீட்டவர்’ என்றும், ’குட்டையாக இருக்கும் உயர்ந்த உள்ளத்தினர்’ என்றும் காண்கின்றார். மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவை மட்டுமே ‘ஆபிரகாமின் மகன்’ என அழைக்கிறார் (காண். 1:1). இங்கே, அதே தலைப்புடன் சக்கேயு அழைக்கப்படுகின்றார். ‘ஏழை லாசர்’ ஆபிரகாமின் மடியில் இளைப்பாறுகிறார். சக்கேயு தன்னுடைய பெயரின்படி தூய்மையாக இருந்ததால் கடவுளைக் கண்டுகொள்கிறார். நேர்மையாளர்களுக்கும் நீதிமான்களுக்கும் என ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த தலைப்பை கடவுளின் இரக்கத்தைப் பெற்ற சக்கேயுவுக்கும் தருகின்றார் இயேசு. அடுத்ததாக, தான் பெற்றபோது அல்லது தான் இழந்தபோதே சக்கேயு மீட்பைக் கண்டுகொள்கின்றார். இதில் கடவுளின் லாஜிக்கைப் பார்க்கிறோம். இவ்வுலகின் பார்வையில் நம்முடைய சேமிப்புக் கணக்கில் முதலில் எண்ணும் தொடர்ந்து நிறைய பூஜ்யமும் இருந்தால்தான் பணக்காரர் அல்லது ஆசிர்வதிக்கப்பட்டவர் என்ற பட்டம் கிடைக்கிறது. ஆனால், கடவுளின் பார்வையில் இழப்பவரே – ஜீரோ பேலன்ஸ் வைத்திருப்பவரே – ஆசிர்வதிக்கப்பட்டவர் என அழைக்கப்படுகின்றார். தொடர்ந்து, ‘தன்னிடம் உள்ளதன் பாதியை ஏழைகளுக்குக் கொடுப்பதன் வழியாகவும், தான் ஏமாற்றியவர்களுக்கு நான்கு மடங்கு திருப்பிக் கொடுப்பதாகவும்’ சொல்லும்போது, குட்டையான அவரில் உயர்ந்த மனிதரைப் பார்க்கிறார் இயேசு.




ஆக, மக்களின் பார்வையும் இயேசுவின் பார்வையும் ஒன்றிற்கொன்று முரண்படுவதாக இருக்கிறது.

## 3. சக்கேயு எடுத்த செல்ஃபி

‘செல்ஃபி வித் சக்கேயு’ என்று தலைப்பு கொடுத்துவிட்டு, ’சக்கேயு எடுத்த செல்ஃபி’ என்று எழுதுவது முரணாகத் தெரியலாம். செல்ஃபி எடுக்க அழைத்தவர் என்னவோ இயேசுதான். ஆனால், இயேசுவோடு செல்ஃபி எடுத்தவர் சக்கேயுதான்.

எப்படி?

செல்ஃபியை முதலில் புரிந்துகொள்வோம். நான் இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்நிமிடத்தில் ஏறக்குறைய 17000 செல்ஃபிகள் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் என்பது கூகுள் கணக்கு. ஏன் நாம் செல்ஃபி எடுக்கிறோம்? யோசித்துப் பார்த்தால் மூன்று காரணங்கள் தெரிகின்றன: (அ) ‘நானும் அழகுதான்’ – நம்முடைய அழகியல் புரிதலைப் புரட்டிப்போட்டது செல்ஃபி எனலாம். கொஞ்ச வருடங்களுக்கு முன்னால் சின்னத்திரையிலும், வண்ணத்திரையிலும் காட்டப்பட்ட சிகப்புத் தோல் அல்லது வெள்ளைத் தோல், நீண்ட முகம் அல்லது சதுர முகம் அல்லது வட்டமுகம்தான் அழகு என்று காட்டப்பட்டது. இவர்கள்தாம் அழகின் ’மாடல்கள்’ என்றும் அழைக்கப்பட்டனர். ஆனால், ‘நானும் அழகுதான்’ என்று எல்லாரையும் சொல்ல வைத்தது செல்ஃபி. (ஆ) ‘எந்த இரண்டு செல்ஃபிக்களும் ஒன்றல்ல’ – நான் அடுத்தடுத்து என்னை இரண்டுமுறை எடுத்தாலும் அவற்றை ஒப்பிட்டுப்பார்த்தால் இரண்டும் ஒன்றல்ல. ஏனெனில், நான் மாறுகிறேன் அல்லது மாற்றிக்கொள்கிறேன் என்று எனக்கு உணர்த்துவது செல்ஃபி. (இ) ‘செல்ஃபி ஓர் உறைந்த கண்ணாடி’ – கண்ணாடியில் நாம் பார்க்கும் உருவம் நாம் மறைந்தவுடன் மறைந்துவிடுகிறது. ஆனால், செல்ஃபி அந்தப் பிம்பத்தை உறைய வைக்கிறது. என்னை என்னோடு ஒப்பிட அழைக்கிறது செல்ஃபி.

# பனம் விதை நடும் நிகழ்வு கரைத்துறைப்பற்றில் ஆரம்பம்





பனை அபிவிருத்திச் சபை மற்றும் தனியார் நிறுவனங்களின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு கரைத்துறைப் பற்று பிரதேச செயலகப் பிரிவில் பனம் விதைகள் நடும் நிகழ்வு ஆர்மபித்து வைக்கப்பட்டுள்ளது.

மழை காலங்களில் வெள்ள அனர்த்த பாதிப்பினை தவிர்க்கும் வகையில் 35000 பனம் விதைகள் நடுகை செய்வதற்கு கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் இடத்தெரிவு மேற்கொள்ளப்பட்டு இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது கரைத்துறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் திரு.க.விஜிந்தன், பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட முகாமையாளர் ஆர்.சசிகுமார், முல்லை கிழக்கு ப.தெ.வள அ. கூ.சங்க பொது முகாமையாளர் எஸ்.ஜெயறுபன் உள்பட பல அதிகாரிகளும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

# கந்தசஷ்டி சிறப்பு



**பழுமான முருகாநீ பழந்தேடி நின்றாய்**
**பழனிப் பதியமர்ந்து பக்குவமாய் ஆனாய்**
**அழகான இருமாதர் அருகணைத்துக் கொண்டாய்**
**அரனாரின் திருக்குமரா திருவடியே சரணம்**

**வண்ணமயக் காவடிகள் வருமுந்தன் வாசல்**
**வாலைக் குமரியொடு வாலிபரும் வருவார்**
**எண்ணமெலாம் உன்நினைப்பை இருத்திவைக்கும் அடியார்**
**எழில்முருகா எனப்பாடி ஏற்றிநிற்பார் உருகி**

**கண்களிலே பரவசத்தைக் காட்டிநிற்கும் அடியார்**
**கைகூப்பி வேல்முருகா எனவுருகி அழைப்பார்**
**மண்புரள வீதியிலே வருமடியார் கூட்டம்**
**மால்மருகா எனவுரைத்து உனைநினைத்து வருவார்**

**- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண், ஆஸ்திரேலியா**




## டிசெம்பர் 8 இல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

21ஆவது அரசமைப்புத் திருத்தத்க்கு வாக்களிக்க வராத அரசாங்க எம்.பிக்கள், வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பிலும் அவ்வாறே செயற்பட வாய்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வரவு -.செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படும் பட்சத்தில் அரசாங்கத்தைக் கலைக்க வற்புறுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்திடம் தற்போது 8 முதல் 12 எம்.பி.க்கள் மட்டுமே பெரும்பான்மையாக உள்ளனர் எனத் தெரிவித்த அவர், அரசாங்கத்தின் ஒரு சிறிய பகுதியினரும் வாக்களிப்பில் இருந்து விலகினால் வரவு செலவுத் திட்டம் நிச்சயமாக தோற்கடிக்கப்படும். - என்றார்.

## தினசரி 5 லட்சம் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் வழுங்கப்படவுள்ளது. இதற்காக சுமார் 27,000 மீன்பிடி படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என செயலாளர் குறிப்பிட்டார்.

இந்த மீன்பிடி படகுகளில் பெரும்பாலானவை நாளாந்த மீன்பிடியில் ஈடுபடுகின்றமையுடன், கடந்த காலங்களில் அவர்கள் எதிர்கொண்ட பிரதான பிரச்சினை மண்ணெண்ணை தட்டுப்பாடாகும்.

இதேவேளை, மீன்பிடி துறைமுகங்களின் குறைபாடுகள் மற்றும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறியும் விசேட வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.






# அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி

அண்மையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் அரசமைப்பிற்கான 22 ஆவது திருத்தம், 20 ஆவது திருத்தத்துக்கு முன்னர் காணப்பட்ட விடயங்களை முழுமையாகப் பூர்த்திசெய்யவில்லை என்றும், நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் தொடர்பில் உரியவாறான கடப்பாடுகள் மற்றும் மட்டுப்பாடுகளை விதிக்கவில்லை என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும் இந்தப் புதிய திருத்தத்தின் பிரகாரம் நிறுவப்படும் அரசமைப்புப்பேரவை மற்றும் அதனைத் தொடர்ந்து நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பன சுதந்திரமாகவும், பக்கச்சார்பற்ற வகையிலும் இயங்குகின்றமை அவசியம் என்பதுடன் அவை நாடு மற்றும் நாட்டிலுள்ள கட்டமைப்புக்கள் மீதான நம்பிக்கையை மீளுறுதிப்படுத்தும் விதமாக செயற்படவேண்டும் என்று அச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த 21 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசமைப்பிற்கான 22 ஆவது திருத்தம் தற்போது அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தமெனப் பெயர்மாற்றம்செய்யப்பட்டுள்ளநிலையில், இந்தத் திருத்தம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே சட்டத்தரணிகள் சங்கம் மேற்குறிப்பிட்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு

அரசாங்கத்தால் கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்பிற்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலம், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைவாக குழுநிலையின்போது மேற்கொள்ளப்பட்ட சில திருத்தங்களுடன் கடந்த 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தொடர்ச்சியாக நாடளாவியரீதியில் வலுப்பெற்ற மக்கள் போராட்டங்களே அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான அவசியத்தைத் தோற்றுவித்தது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி உள்ளடங்கலாக நிறைவேற்றதிகாரத்தின் பொறுப்புக்கள் தொடர்பில் போதியளவிற்கு ஆராயப்படாமையும் தற்போதைய நெருக்கடிக்கான காரணமாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அரசமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்தின் ஊடாக நீக்கப்பட்டன.

இருப்பினும் வருந்தத்தக்கவகையில் தற்போது நிறைவேற்றப்பட்டிருக்கும் அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தம் 20 ஆவது திருத்தத்துக்கு முன்னர் காணப்பட்ட விடயங்களை முழுமையாகப் பூர்த்திசெய்யவில்லை என்பதுடன் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் தொடர்பில் உரியவாறான கடப்பாடுகள் மற்றும் மட்டுப்பாடுகளை விதிக்கவில்லை.

அரசமைப்பிற்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் நாம் ஏற்கனவே வெளியிட்ட அறிக்கையில் அந்தச் சட்டமூலத்தில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருந்ததுடன் அரசமைப்பு பேரவைக்கான உறுப்பினர்களைப் பரிந்துரைசெய்யும் செயன்முறை அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளால் கட்டுப்படுத்தப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதானது அந்தப் பேரவையின் ஊடாக அதிகாரிகளின் நியமனம் இடம்பெறும் கட்டமைப்புக்களின் நேர்மை, சுயாதீனத்தன்மை ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்தோம்.

எது எவ்வாறிருப்பினும் தற்போது அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அதன் கீழ் நிறுவப்படும் அரசமைப்புப்பேரவை மற்றும் அதனைத்தொடர்ந்து நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பன சுதந்திரமாகவும், பக்கச்சார்பற்ற வகையிலும் இயங்குவது அவசியம் என்பதுடன் அவை நாடு மற்றும் நாட்டிலுள்ள கட்டமைப்புக்கள் மீதான நம்பிக்கையை மீளுறுதிப்படுத்தும் விதமாக செயற்படவேண்டும்.

எனவே, அரசமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்களைப் பரிந்துரைசெய்யும் செயன்முறையின்போது அதன் நேர்மைத்தன்மையை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்றத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சித் தலைவர்களிடம் வலியுறுத்துகின்றோம்.

அதேவேளை அரசமைப்புப்பேரவை ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பதில் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும் அனைவரையும் உள்ளடக்கியதுமான செயன்முறையை அந்தப் பேரவை பின்பற்றவேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

# தெல்லிப்பழையில் மூதாட்டியை சித்திரவதை செய்து நகைகளைக் கொள்ளையிட்ட சந்தேக நபர் கைது!

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் தனிமையில் வசித்த மூதாட்டியை கழுத்தை நெரித்து, சித்திரவதை புரிந்து சங்கிலி மற்றும் மோதிரம் என்பவற்றை கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் அந்தப் பகுதியை சேர்ந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மூதாட்டி தனிமையில் வசித்த வீட்டினுள் அத்துமீறி நுழைந்த நபர் ஒருவர் மூதாட்டியின் கழுத்தை நெரித்து அச்சுறுத்தி, கழுத்தில் இருந்த ஒன்றரை பவுண் சங்கிலி மற்றும் விரலில் அணிந்திருந்த அரை பவுண் மோதிரம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை தெல்லிப்பழை பகுதியை சேர்ந்த நபர் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக உயரடுக்குப் பிரிவில் 226 பேர் உள்ளனராம்!

## தலதா அத்துகோரள தகவல்



முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக 226 பேர் உயரடுக்குப் பாதுகாப்பு பிரிவில் பணியமர்த்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எலைட் பாதுகாப்பு பிரிவில் சுமார் 6 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர் என்றும் இந்த 6 ஆயிரம் பேரில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் பல விடயங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டிய முன்னாள் ஜனாதிபதிக்கு உயரடுக்குப் பாதுகாப்பு பிரிவின் பொலிஸ் திணைக்களத்தில் இருந்து 226 பேர் பாதுகாப்பில் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவருக்கு இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினரும் பாதுகாப்புபணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

ஒருபுறம், 4 ஆயிரம் பேர் நோய்வாய்ப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் மா அதிபர் தெரிவிக்கையில், மறுபுறம், 16 ஆயிரம் பேர் ஓய்வுபெறுகின்றனர் எனக் கூறப்படுகிறது.

இந்தநிலையில், இந்த 4 ஆயிரம் பேருக்கு சேவை நேரம் வழங்க உரிமை உண்டு என தான் எண்ணுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்கள் நோய்வாய்ப்பட்டார்களா, அல்லது பொலிஸில் பணியமர்த்தப்பட்ட போது ஏதேனும் சிக்கல் ஏற்பட்டதா, பொலிஸ் நடவடிக்கையின் போது அவர்கள் ஊனமுற்றார்களா, பொலிஸுக்கு வந்ததும் மன அழுத்தம் அதிகரித்து அவர்களுக்கு நீரிழிவு நோய் வந்ததா என்று தனக்குத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும் இந்த 4 ஆயிரம் பேருக்கு சேவை செய்ய வாய்ப்பு கொடுக்குமாறும் குறைந்தபட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் பணியாற்றுவதற்கான உரிமையை அவர்களுக்கு வழங்குங்கள் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வைத்தியசாலைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டாம் என உத்தரவு!

## எரிசக்தி இராஜாங்க அமைச்சர் விடுப்பு

நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்தாலோசிக்காமல் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் மின்சாரத்தை துண்டிக்க வேண்டாம் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணம் செலுத்தாமையால் கொழும்பு ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் ஏற்பட்ட மின்வெட்டு தொடர்பாக சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மின்வலு மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இவ்வாறு தெரிவித்தார்.

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மின்சாரக் கட்டணம் செலுத்தாத காரணத்தால் இரண்டு தடவைகள் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 26 ஆம் திகதி சிற்றுண்டிச்சாலை மற்றும் வைத்தியசாலையின் பாதுகாப்புப் பிரிவில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன், கடந்த வாரமும் வைத்தியசாலையிலும் இதேபோல் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழுவுடன் சாகல ரத்நாயக்க ஆலோசனை!



ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர், பணி மனைகளின் பிரதானி சாகல ரத்நாயக்க சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரி கள் குழுவுடன் கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டார்.

கடன் வழங்குநர் மாநாடு மற்றும் கடன் மறுசீரமைப்பின் ஆரம்ப நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அறிவித்து, அதற்குரிய பதிலை உடனடியாக அறிவிக்க எதிர்பார்த்துள்ளதாக சாகல ரத்நாயக்க உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

# இன்புளுவன்சா நோய் குறித்து எச்சரிக்கை!

சிறுவர்கள் மத்தியில் இன்புளுவன்சா நோய் அதிகளவில் பரவும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் நோய் அறிகுறி உள்ள பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை சிறுவர் நோய் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், இருமல், வாந்தி மற்றும் தடிமன், இன்புளுவன்சா நோயின் பிரதான அறிகுறிகளாகும். மழையுடனான கால நிலை மற்றும் குளிர் காரணமாக இந்த நோய் பரவுவதற்குப் பிரதான காரணமாகும்.

அதனால் இவ்வாறான நோய் அறிகுறிகள் உள்ள சிறுவர்களை பாடசாலை மற்றும் மதியநேர பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதைப் பெற்றோர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக இந்த நோய் அறிகுறி குடும்பத்துக்குள் பரவிச்செல்ல வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் சிறுவர்கள் மத்தியில் கொவிட் தொற்று பரவுவதில் குறிப்பிடத்தக்களவில் குறைவு காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2022இல் வெளியிடப்பெற்றது.